விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com




கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே


சங்கு 25
ஒலி 021 வள்ளுவர் ஆண்டு 2054 மார்கழி 24 செவ்வாய்க்கிழமை (09.01.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## ஜப்பான் நிதியமைச்சர் இலங்கை வருகிறார்



15

## யாழ்.காங்கேசன்துறை - நாகப்பட்டினம் கப்பல் சேவை பெப்ரவரியில் மீண்டும் ஆரம்பம்

- ஒரு வழிப்பயணத்துக்கு ரூ.26 ஆயிரம்
- 60 கிலோ கொண்டு செல்ல முடியும்



(யாழ்ப்பாணம்)

யாழ். காங்கேசன்துறை மற்றும் நாகப்பட்டினம் இடையிலான பயணிகள் கப்பல் சேவை பெப்ரவரி மாதம் மீண்டும் ஆரம்பிக்கப்பட உள்ளது.

குறித்த தகவலை கப்பல் சேவை நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் 15

### தமிழ் மக்கள் இணைந்து செயற்படத் தயார்

## தமிழ் எம்.பிக்களுக்குள் ஒற்றுமையில்லை

### வடக்கு விஜயம் தொடர்பில் ரணில்



*(யாழ்ப்பாணம்)*

வடக்கு தமிழ் எம்.பிக்களுக்குள் ஒற்றுமையில்லை. தமிழ் மக்கள் எம்முடன் இணைந்து செயற்படத் தயாராகவுள்ளனர் என வடக்கு விஜயம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

*(04ஆம் பக்கம் பார்க்க)*

### அரச ஊழியர்களுக்கு

## ஜனவரி மாதம் முதல் ரூ.5 ஆயிரம் கொடுப்பனவு

(கொழும்பு)

2024ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதல் அரச ஊழியர்களுக்கு வழங்க முன்மொழியப்பட்ட 10,000 ரூபாய் வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவில் 5, ஆயிரம் ரூபாயை ஜனவரி மாதம் முதல் வழங்குவதற்கு ஜனாதிபதி முன்வைத்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ம-7)

## பாம்பு தீண்டியதில் குடும்பஸ்தர் மரணம்

### வரணியில் சம்பவம்

(சாவகச்சேரி)

விஷப் பாம்புக்கடிக்கு இலக்கான குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வரணிப் பகுதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் அதே பகுதியைச் சேர்ந்த 15

## மின்சாரம் தாக்கியதில் இளைஞன் உயிரிழப்பு

### கிளிநொச்சியில் ஆலய தேர்த் திருப்பணியின்போது விபரீதம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் ஆலய தேர் திருப்பணி வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த இளைஞன் ஒருவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார்.

குறித்த சம்பவம் நேற்று கிளிநொச்சி 15

### வட பகுதி வரலாற்றில் முதன்முறையாக

## ரூ.86 கோடியே 40 இலட்சம் பெறுமதியான அபின் மற்றும் கஞ்சா மீட்பு



(கரணவாய்)

வட பகுதியில் வரலாற்றிலே முதன்முறையாக 86 கோடி 40 இலட்சம் ரூபா பெறுமதியான அபின் மற்றும் கேரள கஞ்சா போதைப் பொருட்கள் பருத்தித்துறை, கற்கோவளம் கடற்கரையில் இருந்து பருத்தித்துறை பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

நாடுதழுவியதாக முன்னெடுக்கப்பட்டு வரும் 15

### சுதந்திர தினத்தில் பேரணி

## 3 எம்.பிக்கள் உட்பட 7 பேர் யாழ்.நீதிமன்றால் விடுதலை



(யாழ்ப்பாணம்)

இலங்கையின் 75ஆவது சுதந்திர தினத்தினை கறுப்பு நாளாகப் பிரகடனப்படுத்தி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்றலில் இருந்து கிழக்கு நோக்கி 04

## வாகன இறக்குமதி தற்போதில்லை

(கொழும்பு)

வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான எந்தவொரு தயார் நிலையும் தற்போது இல்லை என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம் பலாபிட்டிய தெரிவித்துள்ளார். 15

### வடமராட்சிக் கடற்கரையில்

## புத்தர் அமர்ந்திருக்கும் அலங்கரிக்கப்பட்ட மிதப்பு



(கரணவாய்)

வடமராட்சி கிழக்கு குடாரப்பு பகுதியில் புத்த பெருமான் அமர்ந்திருக்கும் அலங்கரிக்கப்பட்ட ரதம் ஒன்று நேற்று கரை ஒதுங் 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

உ

# அருள்வளர்
# ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோயில்
## இணுவில் – மருதனார்மடம், சுன்னாகம்.

# இலட்சார்ச்சனைப் பெருவிழா

## தேர்த்திருவிழா - 09.01.2024



(மூலவிதானத்தில் உள்ள மூர்த்தி)

09.01.2024
செவ்வாய்க்கிழமை
அதிகாலை 5.30 மணி அபிஷேகம்
காலை 7.00 மணி வசந்தமண்டப பூஜை
காலை 9.00 மணி தேர்பவனி
மாலை 4.30 மணி பிராயச்சித்த அபிஷேகம்,
பஞ்சமுக அர்ச்சனை



வற்றாத செல்வமும் வளம்மிகு சோலைகளும் வானுயர்ந்த மலைகளும் பாய்ந்தோடும் நதிகளும் பக்தி நெறி வழுவாம்களும் நிறைந்த ஞான சிவபூமியான ஈழமணித் திருநாட்டில் சிரசுபோல விளங்குகின்ற யாழ்ப்பாணத்தில் கமலத்தில் திழைத்து கருணைக் கடலில் மூழ்கி பக்தியில் தேறிய பக்திமான்கள் கூடி வாழும் புண்ணியபதியான இணுவையம்பதியின் அடையாளமாக திகழும் மருதனார்மடம் சுந்தர ஆஞ்சநேயப் பெருமான் மந்திர ஒலியும் மணிநாதமும் பஜனை இசையும் காற்றில் கலந்துவர தேரேறி வருகின்ற காட்சி அற்புதக் காட்சி.

அனுசரணை :-

நன்று செய் இன்று செய்

**இணுவையூர் முருகஜீவ அறக்கட்டளை**
**INUVAIYUR MURUGAJEEVA FOUNDATION**
இணுவில் மேற்கு, இணுவில். ஸ்தாபிதம் : 18.01.2018

( C-8107 )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டினது சொத்துக்களை சூறையாடிய அரசியல்வாதிகளை சிறையில் அடைக்கவேண்டும்

## தம்மரத்ன தேரர்

(கொழும்பு)

**நாட்டின் சொத்துக்களை திருடிய அனைத்து அரசியல் வாதிகளும் சிறையில் அடைக்கப்பட வேண்டும் என்றும் அவர்கள் எவ்வாறு சொத்துக்களை திரட்டினார்கள் என்பதை தாம் பகிர ங்கப்படுத்துவோம் என்றும் தம்மரத்ன தேரர் தெரிவித்து ள்ளார்.**



மிஹிந்தலையில் இருந்து நாட்டை கட்டியெழுப்பும்பாதையை மீள ஆரம்பிப்போம் என்ற நிகழ்ச்சித் திட்டத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய அவர், நாட்டின் நலன் கருதி ஜனாதிபதித் தேர்தலுக்கும் பாராளுமன்றத் தேர்தலுக்கும் தயாராகி வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

மேலும் நாட்டில் தற்போதுள்ள அரசியல் கட்சிகளுக்கு தொலைநோக்கு பார்வை இல்லை என்றும் எதிர்காலத்தில் ஒரே நாடு, ஒரே சட்டம், ஒரே அரசியலமைப்பின் கீழ் நாட்டை நடத்த தயாராக உள்ளதாகவும் நாடு முழுவதிலும் உள்ள பல்வேறு துறைசார் வல்லுநர்களை இணைத்து ஒரே அரசியல் கட்சியில் மற்றும் ஒரு சின்னத்தில் போட்டியிட வைக்கும் முனைப்பில் தாம் செயற்பட்டு வருவதாகவும் தம்மரத்ன தேரர் தெரிவித்துள்ளார். (5-6)

# தொழிற்சாலையில் ஏற்பட்ட வாயுக் கசிவால் புகைமூட்டமான ஹோமாகம

(கொழும்பு)

கொழும்பின் புறநகர்ப் பகுதியான ஹோமாகம கைத்தொழில் வலயத்தில் தொழிற்சாலை ஒன்றில் ஏற்பட்ட கசிவு காரணமாக வாயு ஒன்று சுற்றுச்சூழல் புகைமூட்டமாகக் காணப்பட்டது.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் தீப்பிடித்த குறித்த தொழிற்சாலையில் திருத்தப் பணிகள் இடம்பெற்று வரும் வேளையில் நேற்று அதிகாலை இரண்டு மணியளவில் வாயு புகையாக காற்றில் கலந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

சுற்றுச்சூழலில் குளோரின் வாயு கலந்துள்ளதாக சந்தேகிக்கப்படுகிறது.

தீயணைப்புத்துறை மற்றும் பேரிடர் மேலாண்மை உள்ளிட்ட அதிகாரிகள் எரிவாயு கசிவைத் தடுக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

அப்பகுதியில் புகைமூட்டம் பரவி வருவதால் ஹோமாகம கைத்தொழில் வலயத்தை சுற்றியுள்ள மக்களை முகக் கவசம் அணியுமாறு சுகாதார திணைக்களம் வேண்டுகோள் விடுத்துள்ளது.



மேலும் மூச்சு விடுவதில் சிரமம் உள்ளவர்கள் உடனடியாக மருத்துவமனைக்குச் செல்லுமாறு பொலிஸார் அறிவுறுத்தி உள்ளனர். (5-6)

# 8 இலட்சம் நுகர்வோருக்கான மின்சார இணைப்பு துண்டிப்பு

(கொழும்பு)

மின்கட்டணம் செலுத்தாமையினால் கடந்த 3 காலாண்டுகளில் 800,000 நுகர்வோருக்கான மின்சார இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் நடைபெற்ற பொருளாதார நெருக்கடியை தணிக்கும் துறைசார் மேற்பார்வை குழுவில் இந்தத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தைப் போக்குவதற்கும் நிலையான பொருளாதார வளர்ச்சிக்கான வசதிகளை வழங்குவதற்கும் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு மற்றும் மின்சார சபை தமது பொறுப்பைக் கருத்திற்கொண்டு செயற்படுமாறும் அந்தக் குழுவினால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதன்படி, சர்வதேச நாணய நிதியத்தின் பரிந்துரைக்கமைய மின் கட்டணத்தை செலவுக்கு ஏற்ற வகையில் நிர்ணயம் செய்ய வேண்டும் எனவும் குறித்த குழு பரிந்துரைத்துள்ளது. (5-6)

# மரண அறிவித்தல்



திரு. **சிவகுரு சிவபாதசுந்தரம்**

(ஓய்வு நிலை பொலிஸ் சார்ஜன்)

**தோற்றம்-24.10.1934 மறைவு-06.01.2024**

அல்வாய் கிழக்கு, வெள்ளுருவையைப் பிறப்பிடமாகவும் கரணவாய் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர்.சிவகுரு சிவபாதசுந்தரம்(ஓய்வுபெற்ற பொலிஸ் சார்ஜன்) அவர்கள் 06.01.2024 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவகுரு-கனகம்மா தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வனும் காலஞ்சென்ற பெரியதம்பி-தனபாக்கியம் தம்பதியினரின் அன்பு மருமகனும் தவமணிதேவியின் அன்புக் கணவரும், சிவலோஜினி (டென்மார்க்), சிவரஞ்சினி(சமுர்த்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம் கரவெட்டி), தபேந்திரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கண்ணதாசன் (டென்மார்க்), கணேசலிங்கம் (ஆசிரியர் யா/ஹாட்லிக் கல்லூரி), அகிலா(லண்டன்) ஆகியோரின் மாமனாரும் விதுசன், சாரா, நிலானி, கீர்த்தனன்,ஷாமந்தி, சுபஸ்தி, உஷேனிகா, துசிகா ஆகியோரின் பேரனும் காஜாவின் பூட்டனும் காலஞ் சென்றவர்களான சிவபாக்கியம், ஜெயசோதி மற்றும் விஜயகுமாரி(மலேசியா) காலஞ்சென்ற யோகம்மா மற்றும் செல்லம்மா (ஓய்வு பெற்ற லிகிதர் புலோலி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்) சிவசுப்பிரமணியம் (கொழும்பு, ஓய்வுபெற்ற புகை யிரதநிலைய அதிபர்), பத்மநாதன்(ஓய்வு பெற்ற மக்கள் வங்கி பிராந்திய முகாமையாளர்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 09.01.2024 இன்று செவ்வாய்க்கிழமை மு.ப 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவரசம்திட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (சி-8103)

கரணவாய் தெற்கு,
கரவெட்டி.

தகவல்
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12 ஆவது முறை சம்பியனான பாரிஸ் செயிண்ட் ஜேர்மைன்



இந்த வெற்றியின் மூலம் பிரெஞ்சு சம்பியன் டிராபியை பாரிஸ் செயிண்ட் ஜேர்மைன் அணி தட்டித் தூக்கியது.

பாரிஸ் செயிண்ட் ஜேர்மைன் அணி 12ஆவது முறையாக பிரெஞ்சு சம்பியன் டிராபியை வென்று வரலாறு படைத்துள்ளது.

பிரெஞ்சு சம்பியன் டிராபியின் இறுதிப் போட்டியில் பாரிஸ் செயிண்ட் ஜேர்மைன் மற்றும் டௌலௌசே அணிகள் மோதின.

ஆட்டத்தின் 3ஆவது நிமிடத்தில் ஜேர்மைன் அணியின் லீ காங்-இன் கோல் அடித்தார். அதனைத் தொடர்ந்து, நட்சத்திர வீரர் கைலியன் எம்பாப்பே 44ஆவது நிமிடத்தில் வெற்றிக்கான கோலை அடித்தார்.

இதனால் பாரிஸ் செயிண்ட் ஜேர்மைன் அணி 2-0 என்ற கோல் கணக்கில் டௌலௌசே அணியை வீழ்த்தியது.

இது அந்த அணி கைப்பற்றும் 12 ஆவது கோப்பை ஆகும்.

கடந்த 1985ஆம் ஆண்டில் முதல் கோப்பையை வென்ற பாரிஸ் செயிண்ட் ஜேர்மைன், தற்போது டிராபியை கைப்பற்றி வரலாறு படைத்துள்ளது.

கைலியன் எம்பாப்பே இந்த சீசனில் 23 போட்டிகளில் விளையாடி 22 கோல்கள் அடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (5-6)


## பணிப்பெண் தேவை

வயோதிப பெண் ஒருவரை தங்கி இருந்து பராமரிப்பதற்கு ஆரோக்கியமான பெண் பணியாளர் தேவை
விடுமுறைகள் தரப்படும்
சம்பளம் பேசி முடிவு செய்யலாம் (35,000 - 40,000 வரை)
வெளி மாவட்டத்திலுள்ளவர்களும் வரலாம்
இடம்: யாழ்ப்பாணம்- நெல்லியடி
வரவிரும்புவோர் நேரடியாக தொடர்பு கொள்க தரகர்கள் தேவையில்லை
(C-8108)
தொடர்பு: 075 484 7171

## வேலைக்கு ஆட்கள் தேவை

யாழ் நகரில் இயங்கும் Fancy கடைக்கு வேலை ஆட்கள் (பெண் பிள்ளைகள்) தேவை. (18560)
077 210 5286


## 3 எம்.பிக்கள்...

இடம்பெற்ற பேரணியில் பங்கேற்ற 3 நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட எழு பேரை யாழ்ப்பாண நீதவான் நீதிமன்றம் விடுவித்துள்ளது.

பேரணியில் பங்கேற்ற நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன், சார்ள்ஸ் நிர்மலநாதன், செல்வம் அடைக்கலநாதன் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஈ.சரவணபவன், எம்.கே. சிவாஜிலிங்கம், யாழ் மாநகர முன்னாள் முதல்வர் வி.மணிவண்ணன் மற்றும் வேலன் சுவாமிகள் உள்ளிட்ட எழு பேரே இவ்வாறு வழக்கில் இருந்து விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த வழக்கு நேற்று யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

தேர்தல் காலத்தில் போராட்டம் நடத்தியமை, பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தியமை உள்ளிட்ட குற்றச்சாட்டில் இந்த 7 பேருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

அத்துடன், கடந்த ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தேசிய தைப்பொங்கல் விழாவில் பங்கேற்பதற்காக வருகைதந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட வேலன் சுவாமிகள் உள்ளிட்ட சிலருக்கு எதிரான வழக்கு விசாரணையும் யாழ்ப்பாண நீதவான் நீதிமன்றில் இடம்பெற்று வந்தது.

குறித்த இரண்டு வழக்குகளும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நிலையில் வழக்கு தொடர்பாக பொலிஸார் சட்டமா அதிபரின் ஆலோசனையை பெற வேண்டும் என தெரிவித்திருந்தனர்.

அப்போது பிரதிவாதிகள் சார்பாக முன்னிலையான சட்டத்தரணி இரண்டு வழக்குகளையும் கிடப்பில் போட்டு 11 பேரையும் விடுதலை செய்யுமாறு வேண்டுகோள் விடுத்தார்.

இதனையடுத்து இரண்டு வழக்கையும் கிடப்பில் போட்ட நீதிமன்றம் பிரதிவாதிகள் அனைவரையும் விடுதலை செய்து உத்தரவிட்டது.

இந்த வழக்குகளில் பிரதிவாதிகள் சார்பில் அதிபர் சட்டத்தரணி கே.வி.தவராசாவுடன் சட்டத்தரணி பிருந்தா சந்திரகேஷ் முன்னிலையாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7,33)

## இணைந்து...

நான்கு நாள் விஜயம் மேற்கொண்டு கடந்த வியாழக்கிழமை வடக்குக்கு வந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நேற்று முன்தினத்துடன் தனது விஜயத்தை நிறைவு செய்துள்ளார்.

இந்நிலையில், வடக்கு விஜயம் தொடர்பில் கொழும்பு ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் கட்சிகளுக்கிடையில் நிலவும் முரண்பாடுகளால் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குள் ஒற்றுமை இல்லை. ஆனால், தமிழ் மக்கள் எம்முடன் இணைந்து நாட்டைக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கத் தயாராகவுள்ளனர் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இதனை வடக்கு விஜயத்தின்போது நான் புரிந்துகொண்டேன். எனவே தமிழ் மக்களையும் அரவணைத்துக்கொண்டு நாட்டைக் கட்டியெழுப்புவோம்.

அதேவேளை அரசின் அபிவிருத்தி வேலைத்திட்டங்களில் இணைந்து பயணிக்குமாறு எதிரணியில் இருக்கும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மீண்டும் அழைப்பு விடுகின்றேன் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

வடக்கு விஜயத்தின்போது அவர், அபிவிருத்தி வேலைத்திட்டம் தொடர்பில் பல வேறு தரப்பினருடனும் கலந்துரையாடல்களை நடத்தியிருந்தார்.

நாட்டின் சகல துறைகளிலும் அபிவிருத்தி ஏற்பட வேண்டும். இந்த அபிவிருத்தியில் தமிழ் மக்களின் பங்களிப்பு முக்கிய இடம் வகிக்க வேண்டும். இன, மத, மொழி வேறுபாடின்றி அபிவிருத்தியில் முன்னேற்றம் ஏற்பட்டால்தான் அரசியல் தீர்வுக்கான பயணமும் தடையின்றி தொடரும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (ம-7)

## மரண அறிவித்தல்

தோற்றம்
04 - 08 - 1935



மறைவு
05 - 01 - 2024

### பொன்னையா லட்சுமி

கோப்பாயை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா லட்சுமி அவர்கள் கடந்த 05.01.2024 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் வல்லிபுரம் - சின்னாச்சி தம்பதிகளின் அன்பு புதல்வியும் காலஞ்சென்றவர்களான கந்தையா - புதிராச்சி தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற வள்ளியம்மை மற்றும் சரஸ்வதி, பார்வதி, பழனிவேல், சுப்பிரமணியம் ஆகியோரின் அன்பு சகோதரியும் காலஞ்சென்ற சிவரட்ணம் மற்றும் வசந்தராணி, சிவராசா, பூபதி, ராகினி, மீனலோஜினி, சரோஜினி, காலஞ்சென்ற சசிதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவலோகநாதன், தம்பித்துரை, நட்ணசிங்கம், காலஞ்சென்ற அரசலிங்கம் மற்றும் குணசிங்கம், புஸ்பதேவி, சுதா ஆகியோரின் மாமியாரும் பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகளின் பாசமிகு பேர்த்தியும் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை 10.01.2024 புதன்கிழமை அன்று அவரது இல்லத்தில் நடைபெற்று காலை 9.00 மணியளவில் கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்தில் அன்னாரின் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

077 023 7590
077 496 0771 (18563)
தகவல்
குடும்பத்தினர்


கொலின்ஸ் விளையாட்டு கழக ஏற்பாட்டில்
CJ PROMTERS & ரேனுகா பந்தல் நடாத்தும்
CARNIVAL



இடம்: கொலின்ஸ் விளையாட்டு மைதானம்
(குஞ்சர் கடையடி, நெல்லியடி)
காலம்: ஜனவரி 11ம் திகதி முதல் ஜனவரி 15ம் திகதி வரை
தொடர்புகளுக்கு:
0772546511, 0775002840
(18565)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## இணைய வழியூடாக சிறைச்சாலை கண்காணிப்பு

(கொழும்பு)

காலி சிறைச்சாலையின் நடவடிக்கைகள் நேற்று முதல் இணையவழி தொழில்நுட்பத்தின் ஊடாக முன்னெடுக்கப்படும் என சிறைச்சாலை ஆணையாளர், ஊடகப் பேச்சாளர் காமினி பீ.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

மூளைக்காய்ச்சலால் கைதி ஒருவர் உயிரிழந்துள்ள நிலையில், காலி சிறைச்சாலைக்கு கொண்டுவரப்படும் புதிய கைதிகள் அங்குனகொல பெலெஸ்ஸ சிறைச்சாலைக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

இதன் காரணமாக குறித்த சிறைச்சாலையின் செயற்பாடுகளை மட்டுப்படுத்த சிறைச்சாலை திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது. (5-6)

## 24 மணிநேரத்தில் 955 பேர் கைது

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் விசேட சோதனை நடவடிக்கையின் கீழ், நேற்று அதிகாலை 12.30 உடன் நிறை வடைந்த 24 மணித்தியாலங்களில் 955 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களில் 39 பேர் தடுப்புக் காவல் உத்தரவின் கீழ் விசாரணை செய்யப்பட்டு வருவதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன், கைதானவர்களில் போதைப்பொருட்களுக்கு அடிமையான 31 பேர் புனர்வாழ்வு மையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். (5-6)

## மரண அறிவித்தல்



பிறப்பு 14 - 12 - 1948

இறப்பு 04 - 01 - 2024

### திரு. இராஜேந்திரன் மகேஸ்வரன்

புங்குடுதீவு 2 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த திரு.இராஜேந்திரம் மகேஸ்வரன் அவர்கள் (04.01.2024) வியாழக்கிழமை அன்று சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராஜேந்திரம்-சண்முகபூபதி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம்-விசாலாட்சி தம்பதிகளின் அன்பு மருமகனும் சௌபாக்கியகௌரியின் அன்புக்கணவரும் சுபணாவின் தந்தையாரும் யோகேந்திரனின் மாமனாரும் ஷாரணி, சங்கவியின் தாத்தாவும்

காலஞ்சென்றவர்களான கௌரி, குலேந்திரன் மற்றும் நரேந்திரன், கௌசலா, பிறேமா, நிர்மலா, ரவீந்திரன், சர்வேந்திரன், பாலேந்திரன் அவர்களின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 10.01.2024 நாளை புதன்கிழமை அன்று காலை 8 மணி முதல் E'son's Funeral Services,148,Main street,Jaffna இல் நடைபெற்று நண்பகல் 12 மணியளவில் செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(18552)

தொடர்புகளுக்கு 077 307 4260

தகவல்:- குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### திரு. உலகராசா ஆனந்தபுஸ்பம்



பொன்னாலை தெற்கை பிறப்பிடமாகவும் பொன்னொளி நகர் (பொன்னாலைச்சந்தி) ஐ வசிப்பிடமாகவும் கொண்ட(அமரர்) உலகராசா ஆனந்தபுஸ்பம் (புஸ்பம்) 07.01.2024 ஞாயிற்றுக்கிழமை மாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற உலகராசாவின் அன்பு மனைவியும் சுவேந்தினி(வவி),ரஜனி(வவா), கவிப்பிரியா(கவி), பிரியசாந்தினி (பிரியா),கஜேந்திரன் (கஜன்) (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் தவறஞ்சன்(வரதலட்சுமி வெதுப்பகம் உரிமையாளர்), நவரத்தினம்(டுபாய்), அஜித்குமார், மங்களேஸ்வரன்,வர்ணவி ஆகியோரின் அன்பு மாமியாரும். சிவஞானம்(நாதன்), அமரர் ஸ்ரீகாந்தன்(காந்தன்), மகேந்திரன்(மகேந்தி), ஜெகதீஸ்வரன்(வெள்ளை), ராஜபுஸ்பம்(றஞ்சி) கிருஷ்ணகுமார் (குமார்), அமரர் மகேஸ்வரி (மகேசு), நகுலேஸ்வரி (தங்கா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் கிருஷாந் , கிருஷாந்தினி, தர்மினி, லேனுஜா,கிருஸ்ணவி அமரர். நிருஷாந், மகாலக்ஷ்ணவி,டிலக்ஷனா, வைஸ்ணவி , டினுஷாந், சாமுவேல் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரிகைகள் இன்று (09.01.2024) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரிகைக்காக பொன்னாலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதனை உற்றார் , உறவினர் , நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(18559)

தொடர்புகளுக்கு 077 916 8661 (சகோதரர்)

தகவல்:- குடும்பத்தினர்

## இராசிபலன்

09.01.2024
மார்கழி 24, செவ்வாய்க்கிழமை
திரயோதசி முன்னிரவு 9.15 மணிவரை.
கேட்டை முன்னிரவு 8.15 மணிவரை

சுபநேரம்-11.02-12.32 மணிவரை
இராகுகாலம்-03.32-05.02 மணிவரை
பிரதோஷ விரதம். சித்தாமிர்தம்.

சந்திராஷ்டமம்
பரணி, கார்த்திகை.

வளவன்



**மேஷம்** கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், வார்த்தைகளில் நிதானம் தேவை, கோபமாகப் பேசி விட்டு பின் வருத்தம் அடைய நேரிடலாம், கௌரவக் குறைவான நாள்.



**கடகம்** வீட்டுத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், தொழிலில் புதிய பொறுப்புக்கள் வந்து சேரலாம், புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும்.



**துலாம்** விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, உறவினர் வழியில் சுபவிரயங்கள் ஏற்படலாம், வருமானம் பெருக வழியமைத்துக் கொள்வீர்கள்.



**மகரம்** வருமானம் பெருக வழியமைத்துக் கொள்வீர்கள், திட்டமிட்ட காரியங்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, பெரிய மனிதர்களின் தொடர்பு உங்கள் தகுதியை உயர்த்தும்.



**ரிஷபம்** நண்பர்களால் வளர்ச்சி கூடும் நாள், சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள், எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.



**சிம்மம்** தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், சிந்தித்துச் செயற்பட்டு சிறப்புக்களைக் காணும் நாள்.



**விருச்சிகம்** நினைத்த காரியத்தை எளிதில் செய்து முடிக்கும் எண்ணம் உருவாகும், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், சந்தித்தவர்களால் சந்தோஷம் கிடைக்கும்.



**கும்பம்** பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.



**மிதுனம்** எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு, வம்பு வழக்குகளைச் சமாளித்து வளம் காணும் நாள்.



**கன்னி** குடும்பத்தில் நிலவிய குழப்பங்கள் அகலும், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், வள்ளல்களின் உதவியை நாடுவீர்கள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.



**தனுசு** தொழில் ரீதியான பயணங்கள் இடம் பெறலாம், நண்பர்களின் வழியில் சுபவிரயங்கள் ஏற்படலாம், மனசஞ்சலங்கள் சற்று அதிகரிக்கும், வழிபாட்டில் ஆர்வம் தேவை.



**மீனம்** எதிர்கால நலன் கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், வரவேண்டிய பாக்கிகள் வந்து சேரலாம், தொழில் ரீதியான பயணங்கள் அனுகூலம் தரும்.

பேராசை முடிகிற இடத்தில் சந்தோசம் தொடங்குகிறது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஜனநாயக வழியில் போராடுபவர்களை கைது செய்வதுதான் அரசின் நல்லிணக்கமா?

## காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் போராட்டம்

(நெளுக்குளம்)

**வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் மீதான பொலிஸாரின் அடாவடித்தனத்தை கண்டித்தும் வவுனியா மாவட்ட தலைவி விடுதலை செய்யப்பட வேண்டும் என கோரி முல்லைத்தீவில் காணாமல் ஆக்கப்பட்டோர்களின் உறவுகளால் மாபெரும் ஆர்ப்பாட்ட பேரணி ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.**




முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்றுக் காலை புனித இராஜப்பர் தேவாலயத்திற்கு முன்பாக ஆரம்பமாகிய ஆர்ப்பாட்ட பேரணியானது முல்லை மாவட்டச் செயலகத்திற்கு முன்பாக சென்று குறித்த பேரணியானது நிறைவு பெற்றிருந்தது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பொலிஸ் அராஜகம் ஒழிக, விடுதலை செய் விடுதலை செய் ஜெனிற்றாவை விடுதலை செய், சர்வதேச விசாரணையே எமக்கான தீர்வு, ரணில் அரசே நட்ட ஈடு வழங்கி எமது பேராட்டத்தை நிறுத்தக் கனவு காணாதே, ஜனநாயக வழியில் போராடுபவர்களை கைது செய்வதுதான் ரணில் அரசின் நல்லிணக்கமா? போன்ற பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியிருந்ததுடன், கோசங்களையும் எழுப்பினர்.

அதேவேளை முல்லை பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக கவனயீர்ப்பினையும் வெளிப்படுத்தி கோசங்களையும் எழுப்பி இருந்தனர்.

போராட்டத்தில் முன்னாள் வட மாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், சமூக செயற்பாட்டாளர்கள், காணாமலாக்கப்பட்ட உறவுகளின் உறவினர்கள், பெற்றோர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர். (5-6-299)

## நூல் வெளியீடு

(அக்கராயன்)

ஊடகவியலாளர் மு.தமிழ்ச்செல்வனின் சூழலியல் பத்திகள் தொகுப்பு நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 13 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஏ9 வீதியிலுள்ள கிளிநொச்சி மாவட்டச் செயலக திறன் விருத்தி மண்டபத்தில் காவேரி கலாமன்றத்தின் இயக்குநர் வண. ரி.எஸ்.யோசுவா தலைமையில் இடம்பெறவுள்ளது. (5-6-350)

## போலித்தாள்களுடன் இருவர் கைது

(கொழும்பு)

போலி 1,000 ரூபாய் தாள்களுடன் இரண்டு சந்தேக நபர்கள் மாளிகாவத்தை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் போலித்தாள்களை அச்சிட்டு அவற்றினூடாக போதைபொருள் கொள்வனவு செய்து வந்துள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

இதன்போது 4,000 ரூபாய் போலித்தாள்களுடன் குறித்த இரண்டு சந்தேகநபர்களும் கைதாகியுள்ளனர். கைதானவர்கள் மாளிகாவத்தை மற்றும் தெமட்டகொட பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (5-6)

## வவுனியாவில் ஸ்கானர் இயந்திரத்துடன் வைத்தியர் உட்பட மூவர் கைது



(குருமன்காடு)

வவுனியாவில் பொலிஸ் விசேட புனாய்வு பிரிவினரிடம் புதையல் தொடர்பான ஸ்கானர் இயந்திரம் ஒன்றை 15 இலட்சம் ரூபாய்க்கு விற்பனை செய்ய முயன்ற வைத்தியர் உள்ளிட்ட மூவரை கைது செய்துள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

இளைஞர் ஒருவர் புதையல் தோண்டும் ஸ்கானர் இயந்திரம் ஒன்றை விற்பனை செய்வதற்காக பொலிஸ் புலனாய்வு பிரிவு எனத் தெரியாது, புலனாய்வு பிரிவினரிடம் விலைபேசியுள்ளார். குறித்த ஸ்கானர் இயந்திரத்தை 15 இலட்சம் ரூபாய்க்கு விலை பேசிய அவர், நேற்று கார் மற்றும் ஹயஸ் ரக வாகனம் என்பவற்றில் குறித்த ஸ்கானர் இயந்திரத்தை வவுனியா புதிய பேருந்து நிலையத்திற்கு கொண்டு வந்துள்ளனர்.

இந்நிலையில் விசேட புலனாய்வுப் பிரிவினர் மற்றும் அரச புலனாய்வுப் பிரிவினர் இணைந்து குறித்த கைது நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

மீட்கப்பட்ட ஸ்கானர் இயந்திரம் மற்றும் கைது செய்யப் பட்ட மூவரும் வவுனியா பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளின் பின் அவர்களை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (5-6-250)



கிளிநொச்சி திருவையாறு மகாவித்தியாலயத்தின் 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு பழைய மாணவர்களின் ஏற்பாட்டில் குருதிக்கொடை முகாம் மற்றும் இலவச மருத்துவமுகாம் என்பன திருவையாறு மகா வித்தியாலயத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

(படம்: தேவானந்தன்)


## விண்ணப்பம் கோரல்

வடக்கு மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவினால், கூட்டுறவு ஊழியர் தொடர்பான ஒழுக்காற்று விசாரணைகளை மேற்கொள்வதற்கான விசாரணை உத்தியோகத்தர்களை இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

விண்ணப்பதாரிகள் கூட்டுறவு ஊழியர் தாபன விதிக்கோவை 5.4.14 இற்கு அமைய தெரிவு செய்யப்படுவார். மேலதிக விபரங்களை www.np.gov.lk என்ற இணையத்தள முகவரியில் பார்வையிடமுடியும். விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதி திகதி 2024.02.06.

(விண்ணப்பப் படிவத்தினை எமது அலுவலகத்திலோ அல்லது இணையத்தளத்தினூடாகவோ பெற்றுக்கொள்ள முடியும்)

பா.அபிராமி, செயலாளர்,
கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு,
வடக்கு மாகாணம்.

(சி-8102)


## காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தலைவிக்கு மறியல் நீடிப்பு

(குருமன்காடு)

வவுனியாவில் ஜனாதிபதி வருகைக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்ட காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் தலைவியான சி.ஜெனிற்றாவை எதிர்வரும் 12 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு வவுனியா நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஜனாதிபதியின் விஜயத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து கலந்துரையாடல் இடம்பெற்ற மண்டபத்திற்குச் செல்லும் பாதையில் வட கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினர் கறுப்புக் கொடிகளை ஏந்தியவாறு தமது எதிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

நீதிமன்ற கட்டளையினை அவமதித்தமை, பொலிஸாரின் கடமைக்கு இடையூறு ஏற்படுத்தியமை, அமைதிக்கு பங்கம் விளைவித்தமை போன்ற பல்வேறு குற்றச்சாட்டுக்களில் இருவரை வவுனியா பொலிஸார் நீதிமன்றில் முன்னிலைப் படுத்திய போது காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் தலைவியான சி.ஜெனிற்றாவை எதிர்வரும் 8 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு வவுனியா நீதிவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருந்தது.

நேற்று மீண்டும் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, பொலிஸார் மீது தாக்குதல் மேற்கொண்ட குற்றச்சாட்டிலும் நீதிமன்ற உத்தரவினை மீறிய குற்றச்சாட்டிலும் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் தலைவியான சி.ஜெனிற்றாவை எதிர்வரும் 12ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு வவுனியா மாவட்ட நீதிவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. (5-6-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## 38 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா
## 06.02.2024, 07.02.2024 மற்றும் 08.02.2024

உயர்பட்டங்கள், பட்டங்கள், பட்டப்பின் தகைமைச் சான்றிதழ்கள் மற்றும் தகைமைச் சான்றிதழ்கள் ஆகியவற்றை தகுதியளிப்பதற்காக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 38 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா **06.02.2024, 07.02.2024** மற்றும் **08.02.2024** ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. பின்வரும் தேர்வுகளில் சித்தியடைந்து 38 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவில் பட்டங்களைப் பெறத் தகுதியுடையவர்களை **09.01.2024 தொடக்கம் 19.01.2024** ஆம் திகதி **காலை 9.00 மணி வரை** தமது வேண்டுகோள்களை கீழ்வரும் அறிவுறுத்தல்களுக்கமைய சமர்ப்பிக்குமாறு கோருகின்றேன். மேலதிக விபரங்களுக்குப் பல்கலைக்கழக இணையத்தளம் **www.jfn.ac.lk** இனைப் பார்வையிடவும்.

1. கலாநிதி
2. முதுமெய்யியல்மாணி
3. கிறிஸ்தவகற்கைகளில் முதுமாணி
4. பண்பாட்டுக்கற்கைகளில் முதுமாணி
5. தூய சக்தித் தொழில்நுட்பங்களில் முதுமாணி
6. சூழல் முகாமைத்துவத்தில் முதுவிஞ்ஞானமாணி
7. தமிழில் முதுமாணி
8. முது வியாபார நிர்வாகமாணி
9. கல்வியியலில் முதுமாணி - வவுனியா
10. கல்வியியலில் பட்டப்பின் தகைமைச் சான்றிதழ் - பகுதிநேரம் - வவுனியா
11. சித்தவைத்திய சத்திரசிகிச்சைமாணி
12. வைத்தியமாணி சத்திரசிகிச்சைமாணி
13. வியாபார நிர்வாகமாணி சிறப்பு
14. வியாபார நிர்வாகமாணி
15. வணிகமாணி சிறப்பு
16. வணிகமாணி
17. விவசாயத்தில் சிறப்பு விஞ்ஞானமாணி
18. கலைமாணி சிறப்பு
19. கலைமாணி (தேர்ந்தமை)
20. மொழிபெயர்ப்புக் கற்கைகளில் சிறப்புக் கலைமாணி
21. பொறியியல் சிறப்பு விஞ்ஞானமாணி
22. உயிர்முறைமைகள் தொழில்நுட்பமாணி சிறப்பு
23. பொறியியல் தொழில்நுட்பமாணி சிறப்பு
24. தாதியியல் சிறப்பு விஞ்ஞானமாணி
25. மருந்தகவியல் சிறப்புமாணி
26. மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞான சிறப்பு விஞ்ஞானமாணி
27. வியாபார முகாமைத்துவமாணி
28. செயற்றிட்ட முகாமைத்துவத்தில் சிறப்பு வியாபார முகாமைத்துவமாணி
29. செயற்றிட்ட முகாமைத்துவத்தில் வியாபார முகாமைத்துவமாணி
30. கணக்கியலும் நிதியியலிலும் சிறப்பு வியாபார முகாமைத்துவமாணி
31. சந்தைப்படுத்தல் முகாமைத்துவத்தில் சிறப்பு வியாபார முகாமைத்துவமாணி
32. வியாபாரப் பொருளியலில் சிறப்பு வியாபார முகாமைத்துவமாணி
33. மனிதவள முகாமைத்துவத்தில் சிறப்பு வியாபார முகாமைத்துவமாணி
34. பிரயோக கணிதம் மற்றும் கணிப்பிடலில் விஞ்ஞானமாணி
35. சூழல் விஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணி
36. தகவல் தொழில்நுட்பத்தில் விஞ்ஞானமாணி
37. தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பமாணி சிறப்பு
38. கலைமாணி (வெளிவாரி)

**அறிவுறுத்தல்கள்:**

**1. வேண்டுகோள் படிவங்களைச் சமர்ப்பித்தல்**

அனைத்து விண்ணப்பதாரிகளும் **www.jfn.ac.lk** என்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இணையத்தளத்தின் ஊடாக வேண்டுகோள் படிவத்தினை **19.01.2024 காலை 9.00 மணிக்கு** முன்னர் நிகழ்நிலையாக நிரப்பி விண்ணப்பித்தல் வேண்டும். குறிப்பிட்ட செயல்முறையில் பின்வரும் ஆவணங்களைத் தரவேற்றம் செய்யும் போது ஒவ்வொரு ஆவணமும் **2MB** இற்கு மேற்படாது **'Jpeg'** அல்லது **'jpg'** அல்லது **'pdf'** முறைவடிவில் இருத்தல் வேண்டும்.

1. பற்றுச்சீட்டு
2. பட்டச்சான்றிதழில் பெயரினை உறுதிப்படுத்தும் விண்ணப்பம் (பட்டதாரிகளுக்கு மட்டும்)

நிகழ்நிலையில் பூரணப்படுத்தப்பட்ட வேண்டுகோள் படிவத்தினை தரவிறக்கம் செய்து கையொப்பமிட்டு மேற்கூறப்பட்ட ஆவணங்களுடன் இணைத்து **பதிவுத்தபால்** மூலம் கீழ்க்காணும் முகவரிக்கு **22.01.2024** ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மூலையில் **"38ஆவது பட்டமளிப்பு விழா, (மாணவர் பதிவிலக்கம்:..........)"** எனத் தங்களின் பதிவிலக்கத்தையும் குறிப்பிட்டு எழுதி அனுப்பவும்.

**அஞ்சல் முகவரி**

அனைத்து உள்வாரி விண்ணப்பதாரிகளும் கீழ்க் குறிப்பிட்ட முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்.

1. உதவிப் பதிவாளர்/அனுமதிகள் கிளை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
இராமநாதன் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

அனைத்து வெளிவாரி விண்ணப்பதாரிகளும் கீழ்க் குறிப்பிட்ட முகவரிக்கு விண்ணப் பங்களை அனுப்புதல் வேண்டும்.

2. உதவிப் பதிவாளர் / திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

**2.கட்டணம் செலுத்தும் முறை**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கணக்கிலக்கத்திற்குச் சேரக் கூடியதாக ஏதாவது ஒரு மக்கள் வங்கிக் கிளையில் கட்டணத்தைச் செலுத்த வேண்டும். வங்கிப் பற்றுச் சீட்டில் பெயரையும் மாணவர் பதிவு இலக்கத்தையும் தெளிவாகக் குறிப்பிடவும்.

| கட்டணம் மற்றும் வங்கிக் கணக்கிலக்க விபரம் | | | |
|---|---|---|---|
| கட்டணம் | பட்டதாரிகள் | பட்டப்பின் படிப்பு பட்டதாரிகள் | வெளிவாரிப் பட்டதாரிகள் |
| பட்டமளிப்பு விழாக்கட்டணம் | 4100 | 4500 | 4100 |
| பட்ட மேலங்கிக் கட்டணம் | 1100 | 1400 | 1100 |
| பட்டச்சான்றிதழ்க் கட்டணம் | 1600 | 1900 | 1600 |
| புகைப்படக் கட்டணம் | 1200 | 1200 | 1200 |
| **மொத்தக் கட்டணம்** | **8000** | **9000** | **8000** |
| மக்கள் வங்கி கணக்கிலக்கம் (குறிப்பிலக்கம்) | | | |
| நேரில் சமுகமளிப்பவர் | 970000052100308 | 970000082100310 | 890002460001794 |
| சமுமளிக்காதவர் | 970000052100340 | 970000082100351 | 890002460003311 |

பட்டமளிப்பிற்கு நேரில் சமுகமளிப்போரோ, சமுகமளிக்காதோரோ பொருத்தமான முறையில் மேலே குறிப்பிட்டவாறு தங்கள் பட்டங்களிற்கு ஏற்றவாறு பொருத்தமான குறிப்பிலக்கத்தை வங்கிப் பற்றுச்சீட்டில் குறிப்பிடவும். **மேற்குறிப்பிட்டபடி பொருத்தமான குறிப்பிலக்கம் குறிப்பிடப்படாத எந்த ஒரு பற்றுச்சீட்டும் வங்கியினால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என்பதனைக் குறித்துக் கொள்க.**

**குறிப்பு:** பட்டமளிப்பு விழாவிற்கு சமுகமளிக்காது பட்டச் சான்றிதழைப் பெற விரும்பும் பட்டதாரிகள் மேலங்கிக்கான கட்டணத்தையும் புகைப்படத்திற்கான கட்டணத்தையும் செலுத்தத் தேவையில்லை.

**3.பட்டதாரி மேலங்கி**

நேரடியாக சமுகமளித்து பட்டம் பெறுபவர்கள் அவர்களுக்கான பட்டதாரி மேலங்கிகளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழத்தின் ஆவணக்காப்பகத்தில் பெற்றுக் கொள்ள முடியும். பட்டதாரி மேலங்கி விநியோகம் தொடர்பான விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

**4.பல்கலைக்கழக நிலுவைகள்**

பல்கலைக்கழகத்திற்கு ஏதாவது நிலுவைகள் அல்லது கொடுப்பனவுகள் செலுத்தப்படாதிருந்தால் அவ்விண்ணப்பதாரிக்கு பட்டமளிப்புச் சான்றிதழ் வழங்கப்பட மாட்டாது. மேலதிக தகவல்களுக்கு உள்வாரிப்பட்டதாரிகள் 021 222 6714 அல்லது **admissions@univ.jfn.ac.lk** எனும் மின்னஞ்சல் மூலமும் வெளிவாரிப் பட்டதாரிகள் 021 222 3612 அல்லது **mdlcrd@univ.jfn.ac.lk** எனும் மின்னஞ்சல் மூலமும் தொடர்பு கொள்ளவும்.

**வேண்டுகோள் படிவங்கள் சமர்ப்பிக்க வேண்டிய காலம்: 09.01.2024 இலிருந்து 19.01.2024 காலை 9.00 மணிவரை.**

இறுதித் திகதிக்கு பின்னர் கிடைக்கப் பெறும் வேண்டுகோள்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பதிவாளர்.**

(C-8104)

# பாரதம்

## மீண்டும் பிரதமரான ஷேக் ஹசீனா



(டாக்கா)
பங்களாதேஷ் பிரதமரும் அவாமி லீக் கட்சியின் தலைவருமான ஷேக் ஹசீனா மீண்டும் பிரதமராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார், அவரது கட்சி பிரதான எதிர்க்கட்சியான பி.என்.பியிடமிருந்து 50 சதவீதத்திற்கும் அதிகமான வெற்றியைப் பெற்றுள்ளது.

அவர் இந்த தேர்தலில் வெற்றி பெறுவதுடன் பங்களாதேஷின் பிரதமராக பதவியேற்பது இது ஐந்தாவது முறையாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (5-6)

## யோன்பியோங் கடல் எல்லையில் வடகொரியா துப்பாக்கி பிரயோகம்



(சியோல்)
தென்கொரியாவின் எல்லைத் தீவான யோன்பியோங் கடல் எல்லைக்கு அருகே வடகொரியா தொடர்ந்து நேரடி துப்பாக்கிச் சூட்டு பயிற்சிகளை நடத்தி வருகின்றது.

இந்நிலையில், குடியிருப்பாளர்களை வீட்டின் உள்ளேயே பாதுகாப்பாக இருக்குமாறு தென்கொரியா எச்சரித்துள்ளது.

தென்கொரிய அரசின் குறுஞ்செய்தி அனைத்து குடியிருப்பாளர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளதாகவும் தற்போது வடகொரியவின் துப்பாக்கிச்சூடு சத்தம் கேட்பதாகவும் உள்ளூர் அதிகாரிகள் செய்தி நிறுவனத்திடம் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், குடியிருப்பாளர்கள் வெளிப்புற நடவடிக்கைகளில் மிகவும் கவனமாக இருக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (5-6)

## பங்களாதேஷ

## ரோஹிங்கிய அ

(டாக்கா)
**பங்களாதேஷில் ஆயிரக்கணக்கான ரோ அகதிகள் தங்க வைக்கப்பட்டுள்ள பகுதி தீப்பரவலால் சுமார் 800 வீடுகள் தீ யுள்ளதோடு 5 கல்வி மையங்கள் மசூதிகளும் சேதமடைந்துள்ளன. இ உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லை நாடுகள் சபையின் அகதிகள் நிறுவன துள்ளது.**



## மோடியை அவமரியாதை செய்த மாலைதீவு துணை அமைச்சர்கள் இடைநீக்கம்



(மாலே)
இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை அவமரியாதை செய்யும் வகையில் சமூக ஊடகப் பதிவுகளை வெளியிட்ட மூன்று துணை அமைச்சர்களை மாலைதீவு அரசாங்கம் இடைநீக்கம் செய்துள்ளது.

இதன்படி மரியம் ஷியூனா, மால்ஷா ஷரீஃப், அப்துல்லா மசூம் மஜித் ஆகிய மூன்று அமைச்சர்களே இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

மாலைதீவு ஜனாதிபதி முகமது முய்சு இதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளார்.

இதற்கிடையில் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ள மாலைதீவின் தகவல் மற்றும் கலைத்துறை துணை அமைச்சர் மரியம் ஹியூனா, பிரதமர் மோடியை "கோமாளி" மற்றும் "இஸ்ரேலின் கைப் பாவை" என்று குறிப்பிட்டிருந்தார். (5-6)



## சீனாவின் மு

## மியன்மார் ப

(நைப்பியிதோ)
வடகிழக்கே சீனாவுடனான எல்லையில் உள்ள முக்கிய நகரை மியன்மார் பழங்குடியின குழுக்கள் கைப்பற்றியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மியன்மாரில், ஆங் சான் சூச்சி தலைமையிலான அரசை கவிழ்த்து 2021இல் இராணுவம் ஆட்சியை கைப்பற்றியது.

இதைத் தொடர்ந்து இராணுவ ஆட்சிக்கு எதிராக நாட்டிலுள்ள பழங்குடியின குழுக்கள் தீவிர போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றன.

மூன்று மு
அடங்கிய இ
குழு இராணு
தொடர்ந்து
பல முக்கிய
ஆயுதக்குழு
வருகிறது.இ
வட கிழக்கே
லாக்காயிங்
ஆயுதக் குழு
கைப்பற்றியு
கடந்த ப
மையான ச
யில் இராணு
கைவிட்டு ச
மியன்ம
ஆதரவு தெ
அதே நேரத்
வுக்கும் ஆத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## ...தேஷில் தீக்கிரையான ...ய அகதிகள் முகாம்

...க்கான ரோஹிங்கிய ...ள பகுதியில் ஏற்பட்ட ...ங்கள் தீக்கிரையாகி ...ங்கள் மற்றும் 2 ...ளன. இருப்பினும் ...ில்லை என ஐக்கிய ...நிறுவனம் தெரிவித்...



நாட்டின் தென்கிழக்கு பகுதியில் உள்ள முகாமொன்றிலே நேற்றுமுன்தினம் அதிகாலை இந்த விபத்து நேர்ந்ததாக பங்களாதேஷ் அகதிகள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

பங்களாதேஷ் சுமார் ஒரு மில்லியன் ரோஹிங்கிய அகதிகளின் தாயகமாக காணப்படுகிறது. மியன்மாரில் 2017 ஆம் ஆண்டு முஸ்லிம் சிறுபான்மையினர் மீதான இராணுவ ஒடுக்குமுறையில் இருந்து தப்பிச்சென்ற பலர் இங்கு வாழ்ந்து வருகின்றனர்.

இந்த நிலையில், குறித்த பகுதியில் ஏற்பட்ட தீப்பரவலால் சுமார் 711 தங்குமிடங்கள் முழுமையாகவும் 63 தங்குமிடங்கள் பகுதியளவிலும் சேதமடைந்ததால் 4000 இற்கு மேற்பட்டோர் வீடற்றவர்களாக மாறியுள்ளனர்.

அத்தோடு 5 கல்வி மையங்கள் மற்றும் 2 மசூதிகளும் சேதமடைந்துள்ளன. இருப்பினும் உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லை என ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகள் நிறுவனம் தெரிவித்துள்ளது.

மேலும் தீப்பரவலுக்கான காரணத்தை கண்டறியும் வகையில் விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன. அத்துடன், தீ மேலும் பரவுவதனை தடுக்கும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

பங்களாதேஷில் ரோஹிங்கிய அகதிகள் முகாம்களில் தீப்பரவல் ஏற்படுவது பொதுவானதொரு விடயமாக பார்க்கப்படுகிறது. அத்துடன், வன்முறை காரணமாகவும் ரோஹிங்கிய அகதிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், முகாம்களின் பாதுக்காப்பு மோசமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி, முன்னதாக பல்வேறு சந்தர்ப்பங்களில் தீப்பரவல், வன் முறை உள்ளிட்ட பல காரணங்களினால் ரோஹிங்கிய அகதிகள் பலர் கொல்லப்பட்டுள்ளதுடன், ஆயிரக்கணக்கானோர் வீடற்றவர்களாக ஆக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-6)

## ஜப்பானில்

## இடிபாடுகளில் சிக்கியிருந்த மூதாட்டி உயிருடன் மீட்பு



(டோக்கியோ)

ஜப்பானில் இடிபாடுகளில் சிக்கியிருந்த 90 வயது மூதாட்டி உயிருடன் மீட்கப்பட்டுள்ளார்.

ஜப்பானில் அடுத்தடுத்து ஏற்பட்ட நிலநடுக்கத்தால் மத்திய பகுதியில் உள்ள இஷிகாவா, நிகாட்டா, டயோமா, யமஹடா உள்ளிட்ட மாகாணங்கள் மொத்தமாக பாதிக்கப்பட்டன.

இந்த நிலநடுக்கத்தால் பல இடங்களில் கட்டடங்கள் இடிந்து விழுந்தன. இடிபாடுகளை அகற்றும் பணி தொடர்ந்து நீடித்து வருகிறது. நிலநடுக்கத்தால் இதுவரை உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை 100 ஐ தாண்டியுள்ளது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் மீட்புப் பணியாளர்கள் இஷிவாகா மாகாணம் சுஸூநகரில் இரு மாடி கட்டடத்தின் இடிபாடுகளில் சிக்கியிருந்த 90 வயது மூதாட்டியை உயிருடன் மீட்டுள்ளனர்.

நிலநடுக்கத்தால் ஏற்பட்ட இடிபாடுகளுக்கிடையே உணவின்றி 5 நாட்களுக்கும் மேலாக அந்த மூதாட்டி உயிருடன் இருந்தமை மீட்புப் படையினரை ஆச்சரியப்படுத்தியுள்ளது. (5-6)

## ...ன் முக்கிய நகரை கைப்பற்றிய ...ார் பழங்குடியின ஆயுதக்குழு

மூன்று முக்கிய அமைப்புகள் அடங்கிய இந்த ஆயுதம் ஏந்திய குழு இராணுவத்துக்கு எதிராக தொடர்ந்து போரிட்டு வருகிறது. பல முக்கிய நகரங்களை இந்த ஆயுதக்குழு கைப்பற்றி வருகிறது.இந்நிலையில் நாட்டின் வட கிழக்கே சீனாவை ஒட்டியுள்ள லாக்காயிங் என்ற முக்கிய நகரை ஆயுதக் குழு நேற்றுமுன்தினம் கைப்பற்றியுள்ளது.

கடந்த பல வாரங்களாக கடுமையான சண்டை நடந்த நிலையில் இராணுவம் ஆயுதங்களை கைவிட்டு சரணடைந்தது.

மியன்மார் ராணுவத்துக்கு ஆதரவு தெரிவித்துள்ள சீனா, அதே நேரத்தில் இந்த ஆயுதக் குழுவுக்கும் ஆதரவு தெரிவித்துள்ளது.



போரை நிறுத்தி,அமைதிப் பேச்சு நடத்தும்படி சீனா தொடர்ந்து கூறி வருகிறது. இந்நிலையில், அதன் எல்லையை ஒட்டியுள்ள லாக்காயிங் பகுதியை, பழங்குடியின ஆயுதப் படை முழுமையாக கைப்பற்றியுள்ளது. (5-6)

## ஹமாஸுடனான பேச்சுவார்த்தை நடத்துவது கடினம்-கட்டார் பிரதமர்



(தோஹா)

லெபனானில் நடத்தப்பட்ட தாக்குதலில் ஹமாஸ் அமைப்பின் துணைத் தலைவர் கொல்லப்பட்ட நிலையில் பணயக்கைதிகளை விடுவிப்பது தொடர்பில் அந்த அமைப்புடன் பேச்சுவார்த்தை நடத்துவது கடினம் என கட்டார் அரசாங்கம் அறிவித்துள்ளது .

கட்டார் பிரதமர் மொஹமத் பின் அப்துல்ரஹ்மான் அல் தனி தலைநகர் தோஹாவில் ஹமாஸ் அமைப்பினர் வசம் உள்ள பணய கைதிகளின் குடும்பத்தினருடன் பேச்சுவார்த்தை நடத்தினார்.

அவர்களிடம், பணயக் கைதிகளின் குடும்பத்தினரின் துன்பத்தை புரிந்து கொண்டுள்ளோம்.

ஆனால் பெய்ரூட் நகர தாக்குதலுக்கு பிறகு ஹமாஸ் அமைப்பினருடன் பேச்சு வார்த்தை நடத்துவது கடினமாக உள்ளது என அல் தனி தெரிவித்தார். (5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டு பலன்கள் - 2024

## எதிர்பார்த்த வகையில் பணம் வரும்!



எடுத்தோம் கவிழ்த்தோம் என்றில்லாது சந்தர்ப்ப சூழ்நிலையை உணர்ந்து சமயோஜித புத்தியுடன் பேசும் நீங்கள் அடங்கி எழுபவர்கள். அமைச்சராக இருந்தாலும் ஆண்டவனாக இருந்தாலும் தவறை தட்டிக் கேட்பவர்கள் நீங்கள். உங்கள் இராசிக்கு 7 ஆம் வீட்டில் சந்திரன் நிற்கும் போது இந்தப் புத்தாண்டு பிறப்பதால் உங்களின் தனித் திறமைகளை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். அழகு, இளமை கூடும். திருமணம் தள்ளிப் போனவர்களுக்கு கூடி வரும். வராது என்றிருந்த பணம் கைக்கு வரும். நீண்ட நெடு நாட்களாக தள்ளிப் போன விடயங்கள் முடியும். மனைவி வழி உறவினர்கள் மத்தியில் செல்வாக்கு உயரும். வருட ஆரம்பம் முதல் 30.4.2024 வரை குருபகவான் உங்கள் இராசிக்கு 3 ஆம் வீட்டில் நிற்பதால் கடினமாக உழைத்து இலக்கை எட்டிப் பிடிப்பீர்கள். சுப செலவுகளும் பயணங்களும் அதிகரிக்கும். எதிர்பார்த்த வகைகளில் பணம் வரும்.

கிரஹப்பிரவேசம், திருமணம், சீமந்தம் போன்ற அடுத்தடுத்த சுப நிகழ்ச்சிகளால் வீடு களை கட்டும். வெளிநாடு செல்வீர்கள். குழந்தை பாக்கியம் கிடைக்கும். மகனுக்கு பல இடத்தில் வரன் பார்த்தும் நமக்கு ஏற்ற சம்பந்தம் கிடைக்கவில்லையே என்ற நிலை மாறி, இனி நல்ல வரன் அமையும். மகளின் கூடா நட்பு விலகும். லேசான தலை சுற்றல், சலிப்பு, முன்கோபம், சில காரியங்களில் தடைகள் வந்து செல்லும். உறவினர்கள் சிலர் நன்றி மறந்து பேசுவார்கள். பூர்வீகச் சொத்தில் இருந்து வந்த வில்லங்கம் விலகும். அதிக வட்டிக்கு வாங்கிய கடனை போராடி பைசல் செய்வீர்கள். மற்றவர்களின் அறிவுரைகளை முழுமையாக நம்பி அதிரடியான முடிவுகளை எடுக்க வேண்டாம். வீடு வாகன பராமரிப்புச் செலவுகள் அதிகரிக்கும். பழைய பள்ளி, கல்லூரி நண்பர்கள் சிலர் உங்களுக்கு உதவ முன்வருவார்கள்.

குருபகவான் 1.5.2024 முதல் வருடம் முடியும் வரை உங்கள் இராசிக்கு 4ஆம் வீட்டில் அமர்கிறார். எனவே மன உளைச்சல், மறைமுக எதிர்ப்பு, வீண் விமர்சனம், மூட்டு வலி, சிறு சிறு அவமானங்கள் வரக்கூடும். எடுத்த வேலையை முழுமையாக முடிக்க முடியாமல் அவதிக்குள்ளாவீர்கள். தாயாரின் உடல் நிலை பாதிக்கும். வாகனத்தில் செல்லும் போதும் சாலையை கடக்கும் போதும் கவனம் தேவை.

தாய்வழி உறவினர்களுடன் உரசல்கள் வரும். வழக்கு சம்பந்தமான விடயங்களில் பின்னடைவு ஏற்படும். சிலர் வீடு மாற வேண்டிய நிர்ப்பந்தம் உண்டாகும். கடன் தொந்தரவுகள் அதிகரிக்கும். மற்றவர்களின் தவறான போக்கை நினைத்து அவ்வப்போது வருந்துவீர்கள். யாருக்கும் எதற்காகவும் உறுதிமொழி தர வேண்டாம்.

இந்த வருடம் முழுவதும் உங்கள் இராசிக்கு 2 ஆம் வீட்டில் ராகுவும் 8 இல் கேதுவும் அமர்வதால் அவசர முடிவுகளை தவிர்க்கப் பாருங்கள். குடும்பத்தில் அவ்வப்போது கூச்சல், குழப்பங்கள் வந்து நீங்கும். படபடப்பு, முன்கோபம், பார்வைக் கோளாறு, தூக்கமின்மை வந்து விலகும். பேச்சில் கடுமையைக் குறைத்து எதிலும் நிதானமாக இருக்கவும். மற்றவர்களைப் பற்றி வீண் விமர்சனங்களை தவிர்ப்பது நல்லது. பிள்ளைகளின் பொறுப்பில்லாத் தனத்தை நினைத்து வருந்துவீர்கள். அவர்களின் போக்கிலேயே சென்று திருத்தப் பாருங்கள். அடுக்கடுக்கான செலவுகளை சமாளிக்க முடியாமல் திணறுவீர்கள். திடீர் பயணங்கள் அதிகரிக்கும். அக்கம் - பக்கம் வீட்டாருடன் அளவாகப் பழகுங்கள். உறவினர்களில் சிலர் பழசை மறந்து பேசுவார்கள்.




வருடம் முழுவதும் ஜென்மச் சனி தொடர்வதால் பழைய பிரச்சினைகள் தலைதூக்கும். கணவன் - மனைவிக்குள் சின்னச்சின்ன சண்டைகள் வந்து போகும். பெரிதாக்க வேண்டாம். நெருங்கிய நண்பர்கள், உறவினர்களாக இருந்தாலும் யாருக்கும் ஜாமீன் கையெழுத்திட வேண்டாம். வழக்கில் தீர்ப்புத் தள்ளிப் போகும். பெரிய பதவியில் இருப்பவர்களை பகைத்துக் கொள்ளாதீர்கள். வெளிவட்டாரத்தில் யாரையும் தாக்கி பேச வேண்டாம். பணவரவு இருந்தாலும் வெளியில் கடன் வாங்க வேண்டிய சூழ்நிலையும் ஏற்படும். திடீர் பயணங்கள் அதிகரிக்கும். வியாபாரிகளே! மே, ஜூன் மாதங்களில் கணிசமாக லாபம் உயரும். நவம்பர், டிசெம்பர் மாதங்களில் புது ஏஜென்சி எடுப்பீர்கள்.

வாடிக்கையாளர்களை கவர சில சலுகைகளை அறிவிப்பீர்கள். பாக்கிகளை போராடி வசூலிப்பீர்கள். கூட்டுத்தொழிலில் பங்குதாரர்கள் உங்களை கோபப்படுத்தும்படி பேசினாலும் அவசரப்பட்டு வார்த்தைகளை விட வேண்டாம். ஹோட்டல், கட்டட பொருட்கள், கமிஷன், ரியல் எஸ்டேட் வகைகளால் ஆதாயமடைவீர்கள்.

உத்தியோகத்தர்களே! உங்கள் உழைப்புக்கு ஏற்ற அங்கீகாரம் கிடைக்கும். புதிய பதவி தேடி வரும். மே, ஒக்டோபர், டிசெம்பர் மாதங்களில் புதிய வாய்ப்புகள் தேடி வரும். சம்பளம் உயரும். சக ஊழியர்கள் குறை கூறும் அளவுக்கு நடந்து கொள்ளாதீர்கள். இந்த புத்தாண்டு, முதல் முயற்சியில் எதையும் முடிக்க முடியாமல் போனாலும் தொடர் முயற்சியாலும் தன்னம்பிக்கையாலும் சாதிக்க வைக்கும்.

**பரிகாரம்:** ஸ்ரீகல்யாண வரதராஜரை சென்று வணங்குங்கள். புற்று நோயால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு உதவுங்கள். ஆடை, ஆபரணங்கள் சேரும்.

## நேர்மறை எண்ணங்கள் பிறக்கும்!



கற்றது கைமண் அளவு கல்லாதது உலகளவு என்பதை உணர்ந்த நீங்கள், அதிகம் தெரிந்திருந்தும் அலட்டிக் கொள்ள மாட்டீர்கள். மறப்போம் மன்னிப்போம் என்றிருக்கும் நீங்கள், சண்டைக்காரர்களைக் கூட சந்தோஷப்படுத்துவதில் வல்லவர்கள். உங்கள் 6 ஆவது இராசியில் ஆடம்பரமாக இந்தாண்டு பிறப்பதால் தயக்கம், தடுமாற்றம், பயம் எல்லாம் நீங்கும். குடும்பத்தில் உங்கள் கை ஓங்கும். குருபகவான் 30.4.2024 வரை உங்கள் இராசிக்கு 2 ஆம் வீட்டில் இருப்பதால் பணப்புழக்கம் அதிகரிக்கும். ஆனால் செலவுகள் அடுத்தடுத்து இருக்கும். பிரபலங்களின் நட்பு கிடைக்கும்.

உறவினர்களின் வருகையால் வீடு களை கட்டும். குடும்பத்தில் உங்கள் கை ஓங்கும். தம்பதிகளுக்கு குழந்தை பாக்கியம் உண்டாகும். பிள்ளைகள் குடும்ப சூழ்நிலையை உணர்வார்கள். மகளின் கல்யாணத்தை ஊரே மெச்சும்படி நடத்துவீர்கள். கடனாகவும் கைமாற்றாகவும் பணம் புரட்டி புது வீடு கட்டி குடி புகுவீர்கள். நேர்மறை எண்ணங்கள் பிறக்கும். மகனுக்கு வெளிநாட்டு நிறுவனத்தில் வேலை கிடைக்கும். எதிரும் புதிருமாக பேசிக் கொண்டிருந்த உறவினர்கள் தன் தவறை உணர்வார்கள். வெளிமாவட்ட புண்ணிய தலங்களுக்குச் சென்று வருவீர்கள். மூத்த சகோதரிக்கு இருந்த பிரச்சினைகள் நீங்கும். எதிர்பார்த்த விலைக்கு பழைய மனையை விற்பீர்கள்.

அரசாங்கத்தாலும் அரசியல்வாதிகளாலும் ஆதாயம் உண்டு. மனைவி வழி உறவினர்கள் மதிப்பார்கள். நவீன ரக வாகனம் வாங்குவீர்கள். நிலுவையில் இருந்த வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். குருபகவான் 1.5.2024 முதல் உங்கள் இராசிக்கு 3 ஆம் வீட்டில் அமர்வதால் சில காரியங்களை போராடி முடிக்க வேண்டி வரும். தைரியம் கூடும். எதிர்ப்புகள் அடங்கும். என்றாலும் ஓய்வெடுக்க முடியாமல் உழைக்க வேண்டி வரும். புதிதாக ஆடை, ஆபரணங்கள் வாங்குவீர்கள். உதவி செய்வதாக வாக்குக் கொடுத்தவர்கள் சிலர் இழுத்தடிப்பார்கள். எவ்வளவு பணம் வந்தாலும் எடுத்து வைக்க முடியாத அளவுக்கு வீடு, வாகனப் பராமரிப்புச் செலவுகள் அதிகரிக்கும். இளைய சகோதர வகையில் இருந்த மனத்தாங்கல் நீங்கும். பழைய கடனை தீர்க்க முயற்சி செய்வீர்கள். வசதி, செல்வாக்கைக் கண்டு தவறானவர்களுடன் நட்புறவாட வேண்டாம்.

நீண்ட நாளாக இழுபறியாக இருந்த வழக்குகளில் உங்களுக்கு சாதகமான தீர்ப்பு வரும். தாய்வழி உறவினர்களுடன் இணக்கமாகச் செல்வது நல்லது. பிள்ளைகளை அவர்கள் விரும்பும் படிப்பில் சேர்ப்பதால் அவர்களின் தன்னம்பிக்கை வளரும். நண்பர்களுடன் சேர்ந்து புதிய தொழில் தொடங்க முயற்சி மேற்கொள்வீர்கள். எதைச் செய்தாலும் ஒரு முறைக்கு பல முறை யோசித்து முடிவெடுக்கவும். ராசிக்குள் ராகுவும் 7 இல் கேதுவும் வருடம் முடியும் வரை அமர்கிறார்கள். எனவே மனக் குழப்பம், பேச்சில் தடுமாற்றம், எதையோ இழந்ததைப் போல் ஒரு வித கவலைகள், பதற்றம், தலைச்சுற்றல், பல் வலி வந்து நீங்கும். மனைவிக்கு கர்ப்பப்பை கோளாறு, சிறுசிறு அறுவை சிகிச்சைகள் வரக்கூடும். மனைவி வழி உறவினர்களுடன் மனஸ்தாபங்கள் வந்து நீங்கும். அயல்நாட்டில் இருப்பவர்களால் ஆதாயம் உண்டு.




மகன் அல்லது மகளுடன் வெளிநாடு சென்று வருவீர்கள். வேற்று இனத்தவர்கள் உதவுவார்கள். குலதெய்வம் கோயிலை புதுப்பிப்பீர்கள். யாருக்காகவும் ஜாமீன் கையெழுத்து போட வேண்டாம். வீடு கட்ட வங்கிகளில் பணம் வாங்கியிருந்தவர்கள் சில தவணைகளை குறிப்பிட்ட நேரத்தில் செலுத்த முடியாத அளவுக்கு தர்ம சங்கடத்தில் மூழ்கக் கூடும். இந்த ஆண்டு முழுக்க விரயச் சனி தொடர்வதால் வருங்காலம் பற்றிய கவலைகள் வந்து நீங்கும். பழைய கடன் பிரச்சினை அவ்வப்போது மனதை வாட்டும். முக்கிய பிரமுகர்கள், ஆன்மிகவாதிகள், சித்தர்களின் அறிமுகம் கிடைக்கும். எல்லோருக்கும் நல்லது செய்தும் கெட்ட பெயர்தான் மிஞ்சும். சிலர் உங்களைப் பற்றிய வதந்திகளை பரப்பிவிடுவார்கள். இரவு நேரப் பயணங்களைத் தவிர்ப்பது நல்லது.

வியாபாரிகளே! ஜனவரி மாதத்தில் திடீர் லாபம் உண்டு. வியாபாரத்தை பெருக்க விளம்பரமும் செய்வீர்கள். மே, ஜூன் மாதங்களில் புது ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். கடையை விரிவுபடுத்துவீர்கள். பழைய சரக்குகள் விற்றுத் தீரும். வங்கிக்கு கட்ட வேண்டிய கடனை முறையாக செலுத்துவீர்கள். வேலையாட்கள் பொறுப்புணர்ந்து நடந்து கொள்வார்கள். எண்டர்பிரைசஸ், செங்கல், பேக்கரி, வாகன உதிரிப்பாகங்களால் ஆதாயம் அடைவீர்கள். டிசெம்பர் மாதம் முதல் கூட்டுத்தொழிலில் பங்குதாரர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும்.

உத்தியோகத்தர்களே! வேலைச்சுமை இருந்தாலும் அதிகாரிகளின் ஆதரவான பேச்சால் நிம்மதி அடைவீர்கள். இடமாற்றம் இருந்தாலும் மீண்டும் அதே இடத்தில் வந்தமர்வீர்கள். ஜனவரி மாதத்தில் தகுதி உயரும். ஜூன் மாதத்தில் புது வாய்ப்புகளும் பதவிகளும் அமையும். மறைமுக எதிர்ப்புகள் விலகும். இருந்தாலும் அவ்வப்போது ஆதங்கப்படுவீர்கள். சக ஊழியர்கள் இனி மதிப்பார்கள். இந்த வருடம் பணபலத்தை உயர்த்துவதாகவும் பழைய பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதாகவும் அமையும்.

**பரிகாரம்:** ஸ்ரீபிரகதீஸ்வரரை சென்று வணங்குங்கள். தந்தையில்லா பிள்ளைக்கு உதவுங்கள். மன நிம்மதி உண்டாகும்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடையார்கட்டு குரவில் கிணற்றில் ம.எண்ணெய்!

## குடிநீர் பெறுவதில் சிரமம்

(நெளுக்குளம்)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேசத்திற்கு உட்பட்ட உடையார்கட்டு குரவில் கிராமத்தில் குடும்பம் ஒன்றின் கிணற்றுக்குள் இருந்து கிணற்று நீருடன் மண்ணெண்ணெய் வெளியேறி வருகின்றமை நேற்று முன்தினம் கண்டறியப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருகையில்,குரவில் கிராமத்தில் வசிக்கும் குடும்பம், கடந்த மழை வெள்ளத்தினால் கிணறு வெள்ள நீரில் நிரம்பிய நிலையில் அதனை சுத்தம் செய்வதற்காக கிணற்றினை நீர் இறைக்கும் இயந்திரம் கொண்டு இறைத்துள்ளார்கள்.

இதன்போது கிணற்று நீருடன் மண்ணெண்ணெய் கலந்து கொண்டிருப்பது கண்டறியப்பபட்டுள்ளதுடன் இந்த சம்பவம் கிராமத்தில் பரபரப்பினை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலையில் வீட்டின் உரிமையாளர்கள் கிராம சேவையாளருக்கு தொடர்பினை ஏற்படுத்தி தெரியப்படுத்தியுள்ளதுடன் கிராம சேவையாளர் ஊடாக பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டு . புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமையிலான குழுவினர்கள் சம்பவ இடத்திற்கு வருகை தந்து கிணற்றினை பார்வையிட்டுள்ளதுடன் கிணற்றின் எண்ணெய் கலந்த நீரின் மாதிரி எடுத்து சென்றுள்ளதுடன் இது தொடர்பில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது.

இதேவேளை தங்கள் குடிநீர் மற்றும் வீட்டு தேவைக்காக பயன்படுத்தி வந்த கிணற்றில் மண்ணெண்ணெய் கலந்ததால் குடிநீரினை பெற்றுக் கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளதாக அந்த குடும்பத்தினர் தெரிவித்தனர். (5-6-299)

# மின்கட்டண உயர்வுக்கு எதிராக சஜித் மனுத்தாக்கல்



(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அண்மைய மின்சாரக் கட்டண உயர்வு மற்றும் இலங்கை மின்சார சபையின் பாவனையாளர்களுக்கான மின் இணைப்பைத் துண்டிக்கும் நடைமுறையை எதிர்த்து நேற்று உச்ச நீதிமன்றில் அடிப்படை உரிமை மனு வொன்றை தாக்கல் செய்தார்.

மனுவில் இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு, இலங்கை மின்சார சபையின் தலைமை அலுவலகம், மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர, மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சின் செயலாளர் மற்றும் சட்டமா அதிபர் திணைக்களம் ஆகியோர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

கொழும்பில் உள்ள மேல் நீதிமன்ற வளாகத்திற்கு வெளியே செய்தியாளர்களிடம் பேசிய எதிர்க்கட்சித் தலைவர், மின்சார சபையானது நீர் மின்சாரம் மூலம் அதிகபடியான மின்சாரத்தை உற்பத்தி செய்ததாகவும் இதன்மூலம் ரூ.52 பில்லியன் லாபம் ஈட்டியது. மின்சார சபையின் இலா பத்தின் அடிப்படையில் மின்சாரக் கட்டணங்களைக் குறைக்க வேண்டும் என்றும் தற்போதைய கட்டணங்களுடன் போராடும் குறைந்த வருமானம் பெறும் நுகர்வோருக்கு புதிய விலை சூத்திரத்தை அறிமுகப்படுத்த வேண்டும் என்றும்வலியுறுத்தினார். (5-6)

# போதைக்கு அடிமையான இருவர் மறுவாழ்வு மையத்தில்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் போதைப் பொருளுடன் கைதான இரு இளைஞர்களையும் மறுவாழ்வு மையத்திற்கு அனுப்பி வைக்க மல்லாகம் நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

மானிப்பாய் பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட 24 மற்றும் 25 வயது இளைஞர்களை சட்ட வைத்திய அதிகாரி முன் முற்படுத்தி மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட போது இருவரும் போதைக்கு அடிமையானவர்கள் என கண்டறியப்பட்டது.

அதனை தொடர்ந்து மேலதிக விசாரணைகளின் பின்னர் மல்லாகம் நீதிவான் நீதி மன்றில் பொலிஸார் இரு இளைஞர்களையும் முற்படுத்திய வேளை அவர்களை கந்தக்காடு மறுவாழ்வு மையத்திற்கு அனுப்புமாறு மன்று உத்தரவிட்டது. (5-6-33)

# மாவா பாக்குடன் சந்தேகநபர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழில் கஞ்சா கலந்த மாவா பாக்கினை விற்பனை செய்த குற்றத்தில் இளம் பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில், துன்னாலை கிழக்கை சேர்ந்த குறித்த பெண்ணை பொலிஸார் கைது செய்ததுடன் கைது செய்யப்பட்ட பெண்ணின் உடைமையில் இருந்து ஒரு தொகை கஞ்சா கலந்த மாவா பாக்கினை மீட்டு ள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட பெண்ணை நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (5-6-33)

# சாவகச்சேரியில் விபத்துக்குள்ளான மோ.சைக்கிள்-பட்டா ரக வாகனம் இருவர் படுகாயம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி மருத்துவமனையை அண்மித்து நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை இடம்பெற்ற விபத்தில் பெண் ஒருவரும் மோட்டார் சைக்கிளில் சென்ற இளைஞனும் படுகாயமடைந்துள்ளனர்.

ஏ9 வீதியால் சென்ற பெண்ணை மோதிய மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்து வீதியோரம் நின்ற பட்டா ரக வாகனத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது. இதில் மருத்துவமனையில் இருந்த உறவினரை பார்வையிட வந்த பெண் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

மோட்டார் சைக்கிளை செலுத்தி வந்த இளைஞன் காயங்களுடன் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (5-6-30)

# சதுர்த்தி விரதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வண் வடகிழக்கு கலட்டி வீரகத்திப் பிள்ளையார் தேவஸ்தானத்தில் சதுர்த்தி உற்சவத்தை முன்னிட்டு எதிர்வரும் 14 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை நண்பகல் 12.45 மணிக்கு மூலமூர்த்தி பூஜை, வசந்தமண்டப பூஜை நடை பெற்று விநாயகப்பெருமான் திருவீதி வலம் வரும் காட்சி இடம் பெறும் என ஆலய பிரதம குருக்கள் சிவஸ்ரீ து.விவேகானந்தக்குருக்கள் அறிவித்துள்ளார். (நி-5-6)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 800 | 650 | 700 | 600 |
| உருளைக்கிழங்கு | 120 | 150 | 150 | 160 |
| பச்சைமிளகாய் | 1000 | 1200 | 1300 | 1200 |
| தக்காளி | 500 | 600 | 550 | 600 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 120 | 140 | 150 |
| கோவா | 400 | 500 | 500 | 500 |
| கரட் | 650 | 750 | 950 | 1100 |
| பூசணி | 120 | 120 | 160 | 200 |
| புடோல் | 350 | 350 | 250 | 300 |
| வாழைக்காய் | 250 | 240 | 200 | 300 |
| சின்ன வெங்காயம் | 350 | 450 | 450 | 400 |
| பெரிய வெங்காயம் | 400 | 400 | 450 | 500 |
| பாகற்காய் | 800 | 1000 | 800 | 1000 |
| வெண்டக்காய் | 350 | 300 | 240 | 300 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 100 | 160 |
| பயற்றங்காய் | 400 | 350 | 400 | 500 |
| லீக்ஸ் | 450 | 400 | 450 | 500 |
| பீற்றூட் | — | 800 | 750 | 800 |
| கறிமிளகாய் | 600 | 700 | 800 | 1000 |
| முருங்கைக்காய் | — | — | — | — |
| போஞ்சி | 400 | 450 | 450 | 500 |
| கத்தரிதம்புள்ள | 700 | 600 | 700 | 550 |
| கீரை - 1 பிடி | 160 | 180 | 200 | 200 |
| தேசிக்காய் | 300 | 300 | 350 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 100 | 100 | 80-110 |
| இராசவள்ளி | 850 | 800 | 550 | 500 |
| வெங்காயப்பூ | 800 | 1000 | 700 | 1000 |
| முள்ளங்கி | 200 | 300 | 300 | 400 |
| பொன்னாங்காணி | 100 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 80 | 40 | 50 | 80 |
| ஈரப்பலா | 100 | 150 | 120 | 150 |



தாயக அறக்கொடை நிறுவனத்தினால் கடந்த ஞாயிற்றுக்கிழமை(31) வன்னி விழிப்புலனற்றோர் சங்கத்தினரின் 150 குடும்பங்களுக்கு பொங்கல் பானைகளும் வன்னியிலுள்ள பாடசாலை மாணவர்கள் 646 பேருக்கு சீருடையுடனான கற்றல் உபகரணங்கள் கிளிநொச்சி மத்திய கல்லூரி மண்டபத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பாகம் - 2 பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 373





தாகவே அவனுக்குத் தோன்றியது. புதுமலர்களின் நறுமணம் அவனுக்கு மயக்கத்தை அளித்தது. வீதி முனைகளில் தாமரை மொட்டுக்களும் செண்பக மலர்களும் குப்பல் குப்பலாகக் குவிக்கப்பட்டிருந்தன. பக்தர்கள் அம்மலர்களை வாங்கி அழகிய ஓலைக் கூடைகளில் எடுத்துக் கொண்டு கோயிலை நோக்கிச் சென்றார்கள். ஸ்திரீகளும், புருஷர்களும் அடங்கிய அந்தப் பக்தர் கூட்டங்கள் தெருக்களை அடைத்துக்கொண்டு சென்றன. காவித்துணி அணிந்த புத்த சந்நியாசிகளும் அங்கங்கே காணப்பட்டார்கள். "சாது, சாது" என்ற பெருங் கோஷம் பக்தர் கூட்டத்திலிருந்து எழுந்தது.

இவையெல்லாம் வந்தியத்தேவனுக்கு மிக்க வியப்பை அளித்தன. ஆழ்வார்க்கடியானைப் பார்த்து, "நாம் யுத்த கேந்திரத்துக்கு வருவதாக எண்ணினோம். இது புத்த க்ஷேத்திரமாக அல்லவா இருக்கிறது?" என்றான்.

"ஆம், அப்பா! ஆயிரம் வருஷமாக இது பிரசித்தி பெற்ற புத்த க்ஷேத்திரமாயிற்றே?" என்றான் ஆழ்வார்க்கடியான்.

"ஆனால் இது சோழ சைன்யத்தின் வசத்திலுள்ளது என்று சொன்னீரே?"

"ஆமாம் இப்போதும் அப்படித்தான் சொல்கிறேன்."

"சோழ வீரர்கள் யாரையும் இங்கே காணோமே?"

"ஊருக்கு வெளியில் படை வீடுகளில் இருக்கிறார்கள். அப்படி இளவரசருடைய கட்டளை."

"எந்த இளவரசர்?"

"ஏன்? நாம் யாரைத் தேடிக் கொண்டு வந்திருக்கிறோமோ, அந்த இளவரசர்தான்!"

"அதைப்பற்றி உம்மைக் கேட்கவேண்டுமென்று இருந்தேன். இளவரசரை இங்கே தேடிவிட்டு 'இல்லை' என்று கண்டு, பார்த்திபேந்திரன் திரும்பிப் போய்க்கொண்டிருக்கிறானே? அவரை நாம் இங்கே மறுபடியும் தேடுவதில் என்ன பயன்?"

"அந்தப் பல்லவன் 'இல்லை' என்று சொன்னதனால் நான் நம்பி விடுவேனோ? நானே தேடிப் பார்த்துத்தான் தெரிந்து கொள்வேன். இரணியன் 'ஹரி' என்கிற தெய்வம் இல்லை என்று சொன்னான். அதைப் பிரஹலாதன் நம்பிவிட்டானா?"

"ஓ! வீர வைஷ்ணவரே! நம்முடைய நாட்டில் சைவர்களுடன் ஓயாமல் சண்டை பிடித்துக் கொண்டு வந்தீரே? இங்கே இத்தனை புத்த சந்நியாசிகள் போகிறார்கள். நீர் பாட்டுக்குச் சும்மா வருகிறீரே? என்ன காரணம்? எதிரிகள் கூட்டம் அதிகமாயிருப்பதைக் கண்டு பயந்து போய் விட்டீரா?"

"தம்பி! பயம் என்பது என்ன? அது எப்படியிருக்கும்?"

"கறுப்பாய், பூதாகரமாய் யானையளவு பெரிதாக இருக்கும். நீ பார்த்ததேயில்லையா?"

"இல்லை" என்று ஆழ்வார்க்கடியான் சொல்லிவிட்டு வீதி ஓரத்தில் நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த இரண்டு மனிதர்களை அணுகினான். அவர்கள் தமிழர்கள்போல் தோன்றினார்கள். அவர்களிடம் சிறிது நேரம் ஏதோ பேசிவிட்டு ஆழ்வார்க்கடியான் திரும்பி வந்தான்.

நூற்றுக்கணக்கான புத்தர் சிலைகளை நிர்மாணித்த சிற்பிகளுக்குத் தங்கள் சிற்பத்திறனை முழுதும் காட்டி விட்டோம் என்று திருப்தி ஏற்படவில்லை. எனவே ஹிந்து தெய்வங்களின் படிமங்கள் சிலவற்றையும் புத்தர் சிலைகளுக்கு இடையில் நிர்மாணித்து வைத்தார்கள். அந்த அற்புதமான சிற்பக்கலை அதிசயங்களை இன்றைக்கும் தம்பளை என்னும் ஊரில் உள்ள குகைக்கோயிலில் காணலாம்.

வந்தியத்தேவன் அந்தப் புண்ணிய ஸ்தலத்துக்குள் பிரவேசித்தபோது ஒரு புது உலகத்துக்குள் வந்துவிட்ட

(தொடரும்....)

# சிறுவர் அரங்கம்



## அக்பருக்கும் பீர்பாலுக்கும் அடிக்கடி ஏற்படும் மனவேறுபாடு



அக்பருக்கும் பீர்பாலுக்கும் அடிக்கடி ஏற்படும் மனவேறு அன்றைக்கும் ஏற்பட்டது. அக்பர் ஏதோ சொல்ல, அதற்கு பதிலாக பீர்பால் எதையோ சொல்ல பேச்சு வளர்ந்து பெரிய சச்சரவில் கொண்டு போய்விட்டு விட்டது. மன்னர் கோபம் கொண்டார்.

"இனிமேல் என்னுடைய மண்ணில் நீ வாழக்கூடாது. எனது ஆளுகைக்கு உட்பட்ட மண்ணில் நீர் நடமாடுவதை குற்றமாக நான் கருதுகிறேன். அதனால் என் மண்ணை விட்டு நீ வெளியேறி விடவேண்டும்!" என்று ஆணை பிறப்பித்தார்.

"சரி. உம்முடைய அதிகாரத்துக்கு உட்பட்ட மண்ணில் நான் வாழ மாட்டேன்!" என்று வீராப்பாகச் சொன்ன பீர்பால் அங்கிருந்து வெளியாகி சீன நாட்டுக்கு சென்றார். சில ஆண்டுகள் கழித்து ஏராளமான மூட்டைகளுடன் டில்லி வந்து சேர்ந்தார்.

பீர்பால் ஏதோ ஒரு வெளிநாட்டுக்கு சென்று சிலகாலம் இருந்து விட்டு இப்போது மீண்டும் டில்லிக்கே வந்துவிட்டதை அக்பர் அறிந்தார். உடனே அவருக்கு சினம் வந்தது. தனது தலைமை அமைச்சரை அனுப்பி பீர்பாலை உடனே அரசவைக்கு அழைத்து வரச் சொன்னார்.

பீரபாலின் இல்லம் சென்ற அமைச்சரை அன்போடு வரவேற்று வீடு முழுவதையும் சுற்றிக் காட்டினார்.

"இது என்ன வீட்டுக்குள்ளும் வெளியிலும் மண்ணைக் கொட்டி வைத்திருக்கிறீர்களே?" என்று கேட்டார் அந்த அமைச்சர்.

"இந்த மண் சீன நாட்டில் இருந்து கொண்டு வந்தேன். ஒரு காரணத்திற்காகத்தான் பரப்பி வைத்திருக்கிறேன்!" என்று கூறினார். பின்னர் அந்த அமைச்சரின் வண்டியைப் பின்தொடர்ந்து தன் வண்டியிலேயே அரசவை நோக்கி புறப்பட்டார்.

செல்லும் வழியில் "இதென்ன வண்டிக்குள்ளும் இவ்வளவு மண்??" என்று கேட்டார் அந்த அமைச்சர். "எல்லாம் காரணமாகத்தான்!" என்று பதில் அளித்தார் பீர்பால். அரண்மனைக்குச் சென்றதும் அரசர் முன் நின்று வணங்கினார் பீரபால்.

"என் உத்தரவையும் மீறி இன்னும் டில்லி நகரத்தில் உலவுகிறீர்? என்னுடைய உத்தரவை அலட்சியம் செய்கிறீர். என்னை மதிக்காமல் இந்த மண்ணில் உம்மால் [illegible] என்று கோபத்துடன் கேட்டார் அக்பர்.

"மன்னர் பெருமானே! தங்கள் உத்தரவுக்குக் கீழ்ப்படிவதைத்தவிர வேறு எனக்கு ஒன்றும் தெரியாது. தங்களின் உத்தரவை அப்படியே பின்பற்றிவருகிறேன்!" என்று சொன்னார் பீர்பால் பவ்யமாக.

"எங்கே நிறைவேற்றுகிறீர்? இப்போது டில்லியில் அல்லவா நீர் தங்கி இருக்கிறீர்?" என்றார் அக்பர் சினத்துடன்.

"டில்லியில் நான் தங்கி இருப்பது உண்மைதான். ஆனால் தங்களின் மண்ணில் நான் நடமாடவில்லை. அமைச்சரைக் கேட்டுப் பாருங்கள். அவரே என் வீட்டுக்கு வந்து பார்த்தாரே!" என்றார் பீர்பால்.

அக்பர் அமைச்சரை நோக்கினார் உடனே அமைச்சர் பதில் அளித்தார்..

"மன்னர் அவர்களே! பீர்பால் தம் வீட்டுக்குள்ளும் வீட்டுக்கு வெளியிலும் மண்ணைக் கொட்டி பரப்பி இருக்கிறார். பயணம் செய்த வண்டியிலும்கூட மண்ணைக் கொட்டி இருந்தார். எதற்காக இப்படி எல்லாம் செய்திருக்கிறார் என்று எனக்கு விளங்கவில்லை. அவரைக் கேட்டேன். காரணமாகத் தான் என்று சொல்கிறார்!"

அப்போது பீர்பால், "மன்னர் பிரான் அவர்களே! "என் வீட்டின் உள்ளும் வெளியிலும் நான் பயணம் செய்யும் வண்டியிலும் நான் உலவும் என் வீட்டுத் தோட்டங்களிலும் நான் கொட்டி பரவி இருப்பது சீன தேசத்தில் இருந்து கொண்டு வரப்பட்ட மண். அது டில்லியின் மண் அல்ல. தங்களுக்கு சொந்தமான மண்ணில் நடமாடக் கூடாது என்றீர்கள். அதனால்தான் சீன மண்ணில் நடமாடிக் கொண்டிருக்கிறேன். இது எவ்வாறு தங்கள் உத்தரவை மீறிய செயலாகும்?" என்று அப்பாவி போல் பதில் சொன்னார்.

பீரபால் விளக்கம் கொடுத்ததும் அக்பர் உட்பட அவையினர் சிரித்தனர். மன்னருக்கு சினம் இருந்த இடம் தெரியாமல் மறைந்து போயிற்று.

வாய்விட்டுச் சிரித்தாறே, "உம்மை எப் படி வழிக்குக் கொண்டு வருவது என்றே தெரியவில்லை." என்று மகிழ்ச்சியுடன் சொல்லி தன் உத்தரவினை திரும்பப் பெற்றுக் கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையை உறுதியாகக் கடைப்பிடிப்பதில்
இருந்துதான் வலிமை எல்லாம் கிடைக்கிறது.
~ காந்திஜி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஜனாதிபதித் தேர்தலுக்காக வடக்கில் ரணில் நடத்திய யாகம்

வடபகுதிக்கு நான்கு நாள் விஜயத்தை மேற்கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதனைப் பூர்த்தி செய்து கொழும்பு திரும்பியுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வடக்குக்கான வருகை தொடர்பில் எதிர்க்கட்சிகள் கடும் விமர்சனத்தைச் செய்து வருகின்றன.

இதில் மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர்; பொது மக்களின் வரிப்பணத்தை விரயமாக்கிய ஜனாதிபதியின் வடக்கு விஜயம் எனக் கருத்துரைத்துள்ளார்.

பரவாயில்லை. பொதுவில் எதிர்க்கட்சிகள் இப்படியான கருத்துக்களை முன்வைப்பதனூடாகவே தாங்கள் எதிர்க்கட்சிகள் என்பதனை நிரூபித்து வருகின்றன.

எனவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வடபகுதிக்கான விஜயம் குறித்து எதிர்க்கட்சிகள் முன்வைக்கின்ற கருத்துக்கள் ஒருபுறமிருக்க,

வடபகுதிக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நான்கு நாள் விஜயமொன்றை மேற்கொண்டதன் நோக்கம் என்ன என்று ஆராய்வதுதான் இங்கு பொருத்துடையது.

அந்த அடிப்படையில் பொதுவில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வடபகுதிக்கு அதிலும் குறிப்பாக யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்வதை முக்கியமானதாகக் கருதியிருந்தார்.

யாழ்ப்பாணத்துக்குச் சென்று வருவதன் மூலம் தென்பகுதியில் தமக்கான அரசியல் செல்வாக்கை மேலும் பலப்படுத்த முடியும் என்ற கருத்தியல் அவரிடம் இருந்தது.

அதன் காரணமாகவே அவர் கீரிமலையில் ஜனாதிபதி செயலகமொன்றை நிர்மாணித்தார்.

அதாவது இலங்கையில் இனி ராஜபக்ஷவின் ஆட்சியே தொடரும். எனவே கீரிமலையில் ஜனாதிபதி மாளிகையை அமைப்பதன் மூலம் அங்கு அடிக்கடி வந்து தங்கி நிற்க முடியும் என்பது அவரின் நினைப்பு.

என்ன செய்வது நாமொன்று நினைக்கத் தெய்வமொன்று நினைக்கிறது.

எதுவாயினும் மகிந்த ராஜபக்ஷ கொண்டிருந்த நிலைப்பாட்டை முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் தொடர்ந்தார்.

ஆம், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் யாழ்ப்பாணத்துக்கு வருவதைப் பெருமையாகக் கருதினார்.

இதன் தொடர்ச்சியாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் நான்கு நாள் விஜயமொன்றை மேற்கொண்டு வடபகுதிக்கு வந்தார்.

தான் ஜனாதிபதியாக இருக்கும்போது, வடக்குக்குச் சென்று சில வாக்குறுதிகளை வழங்குவதன் மூலம் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற முடியும் எனக் கருதினார்.

அந்தக் கருத்தியலின் அடிப்படையிலேயே வடபகுதியில் அவரின் நான்கு நாள் யாகம் இடம்பெற்றது.

அதில் தனது ஆட்சிக்காலம் முடிவுற்ற பின்பான காலத்தைச் சுட்டி, அதற்குள் வடபகுதி அபிவிருத்தி செய்யப்படும் எனக் கூறியிருந்தார்.

இங்குதான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வடக்கு யாகம் எதற்கான தென்பது புரிகிறது.

ஆம், அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் என்னை நீங்கள் ஆதரித்தால்தான், நான் இப்போது உங்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியும் என்ற உட்பொருளை அவர் சொல்லாமல் சொல்லியுள்ளார்.

அவரைப் பொறுத்தவரை வடக்கு விஜயம் ஜனாதிபதித் தேர்தலுக்கான பூர்வாங்கக் கிரியை என்று கூறுவதே பொருத்தம்.

# ஊடகவியலாளர் லசந்த படுகொலைக்கு தாமதமின்றி பொறுப்புக் கூறுங்கள்

## சர்வதேச மன்னிப்புச் சபை

(கொழும்பு)

சிரேஷ்ட ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்க படுகொலை செய்யப்பட்டு 15 ஆண்டுகள் பூர்த்தியடைந்திருக்கும் நிலையில், அப்படுகொலையுடன் தொடர்புடையவர்களை தாமதமின்றி பொறுப்புக் கூறச் செய்யுமாறு சர்வதேச மன்னிப்புச் சபை இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது.

சிரேஷ்ட ஊடகவியலாளரும் "சன்டே லீடர்" பத்திரிகையின் ஆசிரியருமான லசந்த விக்ரமதுங்க படுகொலை செய்யப்பட்டு 15 வருடங்கள் கடந்துள்ள நிலையில், படு கொலையாளிகள் இன்னமும் பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்தப்படவில்லை.

இதுகுறித்துக் கருத்து வெளியிட்டுள்ள சர்வதேச மன்னிப்புச்சபை, "15 வருடங்களுக்கு முன்னர் இதேபோன்றதொரு நாளில் லசந்த விக்ரமதுங்க படுகொலை செய்யப்பட்டார்.

இவ்வழக்கை உள்ளக ரீதியில் தீர்ப்பதாக இலங்கை அரசாங்கம் வாக்குறுதியளித்திருக்கின்ற போதிலும், வழக்கு விசாரணைகள் ஸ்தம்பிதமடைந்துள்ளன" என்று சுட்டிக்காட்டியுள்ளது.

அதுமாத்திரமன்றி லசந்த விக்ரமதுங்கவின் படுகொலை தொடர்பில் பொறுப்புக்கூறல் உறுதி செய்யப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி தொடர்ச்சியாகப் போராடிவரும் அவரது குடும்பத்தினருக்கு இன்று வரை நீதி வழங்கப்படவில்லை எனவும் மன்னிப்புச்சபை விசனம் வெளியிட்டுள்ளது.

இந்நிலையில் லசந்தவின் படுகொலையுடன் தொடர்புடையவர்கள் தண்டனைகளிலிருந்து விடுபடுவதை உடன் முடிவுக்குக் கொண்டு வருமாறும், அவர்களைத் தாமதமின்றி பொறுப்புக்கூறச் செய்யுமாறும் மன்னிப்புச் சபை இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது.

அதேவேளை இதுகுறித்து தனது உத்தியோகபூர்வ எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ள இலங்கைக்கான அமெரிக்கத்தூதுவர் ஜூலி சங், அதில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்,

இலங்கையில் உண்மையைப் பாதுகாக்கப் போராடிய ஊடகவியலாளரும், பத்திரிகை ஆசிரியருமான லசந்த விக்ரமதுங்க கொல்லப்பட்டு இன்றுடன் 15 ஆண்டுகள் பூர்த்தியடைந்துள்ளன. உலகளாவிய ரீதியில் ஒடுக்கு முறைகளையும், மீறல்களையும், சிறைத் தண்டனையையும், தமது பணியைச் செய்தமைக்காக உயிரச்சுறுத்தலையும் எதிர்நோக்கியிருக்கும் ஊடகவியலாளர்களுடன் அமெரிக்கா உடன் நிற்கும். சுயாதீன ஊடகமும் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரமும் ஜனநாயகத்தின் மிகமுக்கிய அங்கங்களாகும்" என்று அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

(ம-7)

### எதிர்வரும் காலங்களில்

## நாட்டின் சனத்தொகை கணிசமாகக் குறையலாம்

எதிர்வரும் காலங்களில் இந்நாட்டின் சனத்தொகை கணிசமாகக் குறையலாம் என கொழும்பு பல்கலைக்கழகத்தின் சமூகக் கற்கைகள் பேராசிரியர் இந்திரலால் டி சில்வா தெரிவித்திருந்தார்.

பல காரணிகள் இதனை பாதித்துள்ளதாக பேராசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் பிறப்பு வீதத்தில் 25 வீதம் குறைவடைந்துள்ளமை முக்கிய விடயங்களில் ஒன்று என கொழும்பு பல்கலைக்கழகத்தின் சமூக கற்கைகள் பேராசிரியர் இந்திரலால் டி சில்வா குறிப்பிட்டுள்ளார்.

நம் நாட்டில் ஆண்டு பிறப்புகளின் எண்ணிக்கை மிக வேகமாக குறைந்து வருகிறது.

உதாரணமாக, 2013 இல் நம் நாட்டில் பிறந்தவர்களின் எண்ணிக்கையை ஒப்பிட்டுப் பார்த்தால், 2022 இல் பிறந்தவர்களின் எண்ணிக்கை உண்மையில் சுமார் 90 ஆயிரம் குறைந்துள்ளது.

வேறுவிதமாகக் கூறினால், நாம் ஒப்பிட்டுப் பார்த்தால். 2013 இல் பிறந்தவர்களின் எண்ணிக்கை மற்றும் 2022 இல் பிறந்தவர்களின் எண்ணிக்கை, இது 25% ஆகும் பற்றாக்குறை உள்ளது. பதிவான பிறப்புகளின் எண்ணிக்கை இறப்பு எண்ணிக்கையை நெருங்குகிறது.

இளம் சமூகம் வெளிநாடுகளுக்கு இடம்பெயர்வது உட்பட பல காரணிகளால் எதிர்வரும் காலங்களில் இலங்கையின் சனத்தொகை குறையலாம் என பேராசிரியர் இந்திரலால் டி சில்வா தெரிவித்துள்ளார்.

நம் நாட்டில் ஏராளமான இளைஞர்கள் வெளிநாடுகளுக்குச் செல்கிறார்கள். ஒருபுறம் பிறப்புகள் குறைந்து இறப்புகள் வேகமாக அதிகரித்து வருகின்றன. சென்றவர்கள் திரும்பி வருவதில்லை. நமது மக்கள்தொகை எதிர்காலத்தில் குறையும் போக்கைக் காட்டுகிறது என்றார்.

(ம-7)

## நேபாள விமான நிலையத்தில் இலங்கைப் பெண் கைது

நேபாளத்தின் திரிபுவன் விமான நிலையத்தில் இலங்கைப் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சட்டவிரோதமாக தங்கம் வைத்திருந்த குற்றச்சாட்டில் குறித்த இலங்கை பெண் கைது செய்யப்பட்டுள்ளார்.

டுபாயில் இருந்து சென்ற பெண் தங்கத்தை தூள் வடிவில் கடத்தியுள்ளார்.

தனது உள்ளாடையில் தங்கத்தை மறைத்து வைத்து கொண்டு செல்ல முயற்சித்துள்ள நிலையில் கண்டுபிடிக்கப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளார்.

கைப்பற்றப்பட்ட தங்கத்தின் எடை 1 கிலோ 300 கிராம் என விமான நிலைய பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

(ம-7)

## நாட்டில் அரிசி தட்டுப்பாடு பெப்ரவரியில் முடிவுக்கு

நாட்டில் நிலவும் கீரி சம்பா மற்றும் சம்பா அரிசிக்கான தட்டுப்பாடு எதிர்வரும் பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதியுடன் முடிவுக்கு வரும் எனவும் அந்த இரண்டு வகை அரிசிகளின் பற்றாக்குறையை ஈடுகட்ட அரிசியை இறக்குமதி செய்வது மேலும் பல பிரச்சினைகளை ஏற்படுத்தும் எனவும் ரத்னா அரிசி நிறுவனத்தின் தலைவர் தமித்ரபால லங்கேஸ்வரா தெரிவித்தார்.

இம்மாதம் 15ஆம் திகதி அறுவடை ஆரம்பமாகி, கீரி சம்பா அரிசி கிடைத்த பின்னர் அதிகளவு அரிசியை சந்தைக்கு வழங்க முடியும் எனவும் நெல் அறுவடை நெருங்கும் போது அரிசியை இறக்குமதி செய்வதன் மூலம், நெல் விலையை உயர்த்தக் கோரி விவசாயிகள் மீண்டும் வீதியில் இறங்கலாம் என்றும் அவர் கூறினார்.

(ம-7)

### கோப்பாய் செல்வபுரம் பகுதியில்

## கஞ்சா, கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட பெண் கைது

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் செல்வபுரம் பகுதியில் கஞ்சா மற்றும் கசிப்பு விற்பனையில் ஈடுபட்டு வந்த பெண்ணொருவர் பொலிஸாரின் விசேட சுற்றி வளைப்பின் போது கைது செய்யப்பட்டுள்ளார்.

நீண்ட நாட்களாக கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டு வருவதாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து நேற்று சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது குறித்த நபரின் வீட்டில் இருந்து 100 கிராம் கஞ்சாவும் 10 லீற்றர் கசிப்பும் ஒரு தொகை பணமும் மீட்கப்பட்டுள்ளது.

யாழ் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருக்கு கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வு பிரிவினர் மற்றும் கோப்பாய் பொலிஸாரும் இணைந்து குறித்த கைது நடவடிக்கையை மேற்கொண்டனர்.

35 வயதான பெண்ணே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

(ம-7,33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராம அலுவலர் பிரிவுகள் தோறும் நடைமுறைப்படுத்த இருக்கும் மக்கள் சபைகள் (ஜனசபா)



06

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

ஆனாலும் இம்முறையின் கீழ் மையப்படுத்தப்பட்ட அதிகாரத்தினை குவித்து வைத்திருத்த அரசாங்க அமைப்புகளால் இந்தியாவின் அனைத்துப் பகுதிகளையும் செயற்றிறனுடன் ஆட்சிப்படுத்த முடியாது போனது. குறிப்பாக அதிக மக்கள் செறிந்து வாழும் கிராமியப் பகுதிகளை உரிய முறையில் கவனிக்க முடியாமற் போனது. இத்தகையதோர் நிலையில்தான் ஏற்கனவே கிராமிய மட்டத்தில் இயங்கிவந்த பஞ்சாயத்துக்கள் மீதும் மகாத்மா காந்தியினது சுயராட்சிய (Swaraj) கொள்கை மீதும் இந்திய அரசின் கவனம் ஈர்க்கப்பட்டது.

எனவே இதுபற்றி ஆராயும் பொருட்டு 1957ஆம் ஆண்டு பல்வந்ராய் மேத்தா குழுவானது அமைக்கப்பட்டு உள்ளூராட்சி தொடர்பான அறிக்கையினை சமர்ப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டது. இக்குழு தனதறிக்கையில் நிர்வாக ரீதியாக அதிகாரத்தை பரவலாக்குதல், இப்பரவலாக்கல் மூலம் அமைக்கப்படும் நிர்வாக அமைப்புக்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டிருத்தல், இப்பிரதிநிதிகளைக் கொண்டே கிராமிய அபிவிருத்தியை ஏற்படுத்தல் போன்ற விடயங்கள் தொடர்பில் பிரஸ்தாபித்திருந்தது.

இதனைத் தொடர்ந்து நேருவின் ஆட்சிக்காலத்தில் பஞ்சாயத்து இராச்சிய செயன்முறையில் எழுச்சிப்போக்கினை காணமுடிந்தாலும் பஞ்சாயத்துக்கள் யாப்பு ரீதியாக அங்கீகரிக்கப்படவில்லை. நேருவின் மரணத்தின் பின் ஏற்பட்ட உள்ளூர் அரசியல் மாற்றங்களினால் குறிப்பாக காங்கிரஸ் தலைமைத்துவத்தினுள் ஏற்பட்ட முரண்பாடுகள், மாநில அதிகாரங்கள் மத்தியினால் அபகரிக்கப்பட்டமையும் அதனைத் தொடர்ந்து மாநில அரசாங்கங்கள் பஞ்சாயத்துக்களின் அதிகாரங்களை பறித்துக் கொண்டமை போன்ற காரணங்களால் பஞ்சாயத்து முறைமை செயலற்றுப்போனது.

அதனைத் தொடர்ந்து 1977இன் பின்னர் பஞ்சாயத்து முறைமை பற்றிய கோசங்கள் மீளெழத் தொடங்கின. 1977இல் ஜனதா கட்சி ஆட்சியின் போது பஞ்சாயத்து முறைமை பற்றி ஆராயும் பொருட்டு அமைக்கப்பட்ட அசோக் மேத்தா குழு தனது அறிக்கையில் "பஞ்சாயத்து அமைப்புக்களுக்கு அரசியல் சாசனத்தின் மூலம் அதிகாரத்தினை வழங்கி, அதற்கு மத்திய அரசைப்போல் ஒரு அரசாங்கம் எனும் அந்தஸ்தினைத் தர வேண்டும்" என்று விதந்துரைத்திருந்தமையே இதற்குக் காரணமாகும்.

இவற்றின் விளைவாக 1989 மே 16இல் புதிய பஞ்சாயத்து முறைமை பற்றிய மசோதா மாநிலங்களின் எதிர்ப்புக்கு மத்தியில் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டு தோல்வியைத் தழுவியது. மாநிலங்களின் அதிகாரத்தை இம்மசோதா மூலம் மத்தியரசு கட்டுப்படுத்த முயல்கிறது எனும் அடிப்படையிலேயே மாநிலங்கள் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தன. எவ்வாறெனினும் அம்மசோதாவில் சில திருத்தங்கள் மெற்கொள்ளப்பட்டு குறித்த மசோதாவானது 1992இல் யாப்பின் 73வது திருத்தச்சட்டமாக மசோதா மக்களவையால் அங்கீகரிக்கப்பட்டது.

73ஆவது சட்டத்திருத்த மசோதா மத்தியினால் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து 1994 ஏப்ரல் 24இற்குள் ஏனைய மாநிலங்களும் பஞ்சாயத்து அமைப்பினைத் ஸ்தாபிப்பதற்கான சட்ட மூலத்தினை கொண்டுவந்து விட்டன. யாப்பு ரீதியாக பஞ்சாயத்துக்கள் மாநில விடயம். எந்தவொரு மாநிலமும் தனது தனிப்பட்ட அரசியல்பொருளாதார நிலைக்கமைய அதனை ஏற்றுக் கொள்கிறது. அதனால் எல்லா மாநிலங்களிலும் ஒரேமாதிரியிலமைந்த பஞ்சாயத்து அமைப்புக்களைக் காணமுடிவதில்லை. ஆயினும் பஞ்சாயத்துக்களின் கட்டமைப்பைப் பொறுத்தவரையில் பஞ்சாயத்துக்கள் மூன்று அடுக்கினைக் கொண்டதாக காணப்படுகின்றது.

இதில் முதல் நிலையில் காணப்படுவது கிராமிய பஞ்சாயத்துக்களாகும். இவை கிராம சபைகளில் அங்கத்துவம் வகிக்கும் மக்களால் நேரடியாக தெரிவு செய்யப்படும் 5-30 வரையான உறுப்பினர்களைக் கொண்டு காணப்படுகிறது. குறிப்பிட்ட கிராமிய எல்லைக்குள் வாழும் வாக்காளர்கள் இத்தேர்தலில் வாக்களிக்க முடியும். கிராமிய பஞ்சாயத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் பெண்களுக்கும் ஆசனங்கள் ஒதுக்கப்படுவது ஓர் முக்கிய அம்சமாகும். கிராமிய மக்களால் தெரிவு செய்யப்பட்டவருள் இருந்து ஒருவர் இதன் தலைவராக தெரிவு செய்யப்படுவார். கிராமிய பஞ்சாயத்துக்கள் தம்முடைய செயற்பாடுகள் தொடர்பில் கிராமிய சபைகளுக்கு பொறுப்புக் கூற கடமைப்பட்டுள்ளன.

கிராமிய வீதிகளையும் சந்தைகளையும் அமைத்தல், புனர் நிர்மாணம் செய்தல், வீதி விளக்குகளை பராமரித்தல், வரிகளை அறவிடுதல், கிராமிய பிறப்பு, இறப்பு, திருமணப்பதிவுகளை பேணிப் பாதுகாத்தல் கிராமிய மக்களின் சுகாதாரத்தையும் ஆரோக்கியத்தையும் பேணும் திட்டங்களை முன்னெடுத்தல், கிராம சபைகளின் கூட்டங்களை ஒழுங்கு செய்தல் போன்றன இதன் பணிகளாகும். கிராமிய பஞ்சாயத்துக்கள் கிராமங்களிலிருந்து அறவிடப்படும் வரிகள் மூலமாகவும், மாநில அரசு மற்றும் ஜில்லா பஞ்சாயத்திலும் இருந்து கிடைக்கப் பெறும் உதவிகள் மூலமாகவும் தமக்குரிய நிதியினைப் பெற்றுக் கொள்கின்றன.

கிராமிய பஞ்சாயத்துக்களுக்கு மேல் நிலையில் தொகுதி மட்ட பஞ்சாயத்துக்கள் (Block-level Panchayats) காணப்படுகின்றன. ஒவ்வொரு மாநிலங்களிலும் இவை வேறு பெயர் கொண்டு அழைக்கப்படுகின்றன. குறிப்பாக ஆந்திராவில் மண்டல் பிரஜா பரித் எனவும். மண்டல் பஞ்சாயத் என கர்நாடகாவிலும் தாலுகா பஞ்சாயத் என குஜராத்திலும் அழைக்கப்படுகின்றன. இதில் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களும் நியமிக்கப்படும் உறுப்பினர்களும் பதவி வழியாக உறுப்புரிமை பெறுவோரும் இதில் அங்கத்துவம் வகிக்கின்றனர். தொகுதிமட்ட பஞ்சாயத்துக்கள் 20 - 60 உறுப்பினர்களைக் கொண்டு காணப்படும். இவர்களின் பதவிக் காலம் ஐந்து வருடங்களாகும்.

விவசாயத்துறையின் அபிவிருத்திக்கான அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல், சிறிய சுகாதார நிலையங்களையும் முன்பள்ளிகளையும் அமைத்தல் வீதி மற்றும் வடிகால் திட்டங்களை அமைத்தலும் புனரமைப்புச் செய்தலும், சிறிய ரக கைத்தொழில்களை விருத்திசெய்தல், கூட்டுறவு சங்கங்களை அமைத்தல் போன்றன பஞ்சாயத்துக்களின் பிரதான தொழிற்பாடாக காணப்படுகின்றது. மாநில அரசிடமிருந்து பெறும் உதவிகள், கடன்கள் என்பன இவற்றின் பிரதான நிதி மூலங்களாகும்.

பஞ்சாயத்து இராச்சிய கட்டமைப்பினில் உயர் மட்டத்தில் காணப்படுபவை மாவட்ட மட்ட (District Level) பஞ்சாயத்துக்களாகும். இவை ஜில்லா பஞ்சாயத்துக்கள் என பரவலாக அறியப்படுகிறது. இவற்றுக்கு குறைந்தது 50 - 75 வரையான உறுப்பினர்கள் மக்களின் வாக்களிப்பு மூலம் ஐந்து வருட பதவிக் காலத்துக்கு தெரிவு செய்யப்படுகின்றனர். பதவிவழி உறுப்பினர்களும் இதில் அங்கத்துவம் வகிக்கின்றனர். மாவட்ட ஆட்சித் துறைத் தலைவர் இதன் நிர்வாக விடயங்களுக்கு தலைமைவகிப்பார்.

கிராமிய மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிக் கொடுத்தல், மாவட்ட அபிவிருத்தித் திட்டங்களை வகுத்தல், அவற்றை நிறைவேற்றுதல், விவசாயத் துறையினை முன்னேற்றுவதற்கான உதவிகளை வழங்குதல், கிராமியமட்டத்தில் பாடசாலைகளை அமைத்து அவற்றைப் பராமரித்தல், முதியோர் எழுத்தறிவை மேம்படுத்தும் திட்டங்களை வகுத்தல், நூலகங்களை செயற்படுத்தல், கிராமிய மட்டத்தில் வைத்தியசாலைகள், சுகாதார நிலையங்கள் என்பவற்றை அமைத்தல், தொற்று நோய்களுக் கெதிரான தடுப்பூசிகள் வழங்குதல், வீதிகள், பாலங்கள் போன்றவற்றினை அமைத்தல், தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்கான திட்டங்களை வகுத்து நடைமுறைப்படுத்தல், கைத்தொழிற்றுறை, விவசாயத் தொழிற்றுறை போன்றவற்றில் சிறிய ரக முதலீட்டாளர்களை ஊக்குவித்தல் போன்றன மாவட்ட மட்ட பஞ்சாயத்துக்களின் பிரதான செயற்பாடுகளாகும்.

மாவட்ட மட்ட பஞ்சாயத்துக்கள் வரிவிதித்தல் மூலமாகவும், மாநில அரசிடம் இருந்து பெறும் உதவிகள் மூலமாகவும் தம் நிதித் தேவைகளினை நிறைவேற்றிக் கொள்கின்றன. பஞ்சாயத்து முறையின் ஊடாக அதிகாரத்தினை பரவலாக்குவதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சியில் பின்வரும் முக்கிய விடயங்களினை அவதானிக்க முடிகிறது.

பஞ்சாயத்துக்கள் உள்ளூர் சுயாட்சி அரசாங்கம் என அழைக்கப்படுகிறது. உள்ளூர் சுயாட்சி அரசாங்கம் என்பது ஓர் அதிகாரப் பரவலாக்கல் முறையே ஆகும். உள்ளூர் சுயாட்சி அரசாங்கம் (Local Self Government) என்பதில் உள்ளூர் (Local) என்பது நாட்டினது சிறியதோர் பகுதியைக் குறிக்கிறது. சுய (Self) என்பது ஒருவரின் தனிப்பட்ட ஆர்வத்தினைக் குறிக்கிறது. அரசாங்கம் (Government) என்பது ஆளும் முறையினது தொகுப்பு அல்லது கருவியாகும். எனவே உள்ளூர் சுயாட்சி அரசாங்கம் (Local Self Government) என்பது குறித்த ஓர் பகுதியில் வசிப்போர் தம்மை ஆளுவதற்காக தம்மாலேயே ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட அமைப்பாகும். இத்தகைய ஸ்தாபனங்கள் மத்திய அல்லது மாநில அரசின் சட்டங்கள் மூலமாக உருவாக்கப்படுவதுடன் தமது அதிகாரப் பரப்புக்குள் பயன்படுத்தத்தக்க அதிகாரங்களினைக் கொண்டிருக்கும்.

இது சமுதாய அபிவிருத்திக்கான வாய்ப்பினையும் வழங்குகிறது. குறிப்பாக பொருளாதார விருத்தியினை பிரதானமாக கொண்டு அமைக்கப்பட்ட பஞ்சாயத்துக்கள் மக்களால் கிராமிய மட்டத்தில் அடையாளப்படுத்தப்படும் அபிவிருத்தித் திட்டங்களினை மேற்கொள்கின்றன. (தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாம்பு தீண்டிய...

மகேந்திரன் (வயது-62) என்ற குடும்பஸ்தரே உயிரிழந்தவராவார்.

மேற்படி குடும்பஸ்தர் அவருடைய தோட்டத்தில் மாட்டிற்கு புல் வெட்டிய போது விஷப் பாம்பு தீண்டியுள்ளது. இதனையடுத்து குடும்பஸ்தர் மயக்க மடைந்த நிலையில் அயலவர்கள் அவரை மீட்டு வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போதிலும் அவர் செல்லும் வழியில் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரது சடலம் பிரேத பரிசோதனை மற்றும் மரண விசாரணைகளின் பின்னர் நேற்று திங்கட் கிழமை உறவினர்களிடம் ஒப்படைக் கப்பட்டுள்ளது.

மரண விசாரணைகளை கொடிகாமம் பிரிவு மரண விசாரணை அதிகாரி திருமதி சி.தவமலர் மேற்கொண்டார். (ம-7,30)

## மின்சாரம்...

இராமநாதபுரம் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இராமநாதபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வட்டக்கச்சி ஸ்ரீரங்கநாத பெருமாள் ஆலய தேர்த் திருப்பணி வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த 29 வயதுடைய ஜேகதீஸ்வரன் பவித்திரன் என்ற வவுனியா பூந்தோட்டம் பகுதியைச் சேர்ந்த இளைஞனே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த இளைஞனின் சடலத்தை கிளிநொச்சி நீதிமன்ற நீதவான் பார்வையிட்ட பின்னர் பிரேத பரிசோதனைக்காக சடலம் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு, பின்னர் உறவினரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இராமநாதபுரம் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-7)

## புத்தர்...

கியுள்ளது.

இதனைப் பலரும் அதிசயமாக பார்வையிட்டு வருகின்றனர். (ம-7,60)

## யாழ்.காங்கேசன்...

சோமசுந்தரம் நிரஞ்சன் நந்தகோபன் தெரிவித்துள்ளார்.

விரைவில் பயணச்சீட்டுக்கான முன்பதிவை மேற்கொள்ளவுள்ளதாகவும் அத்துடன் பயணச்சீட்டின் விலையை குறைப்பதற்கு எதிர்பார்ப்பதாகவும் நிர்வாக இயக்குநர் குறிப்பிட்டுள்ளார்.

கப்பல் சேவை குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

சிவகங்கை என்ற பெயருடைய கப்பல் தனது முதல் பயணத்தை ஆரம்பிக்கவுள்ளது.

இந்தக் கப்பலானது பெப்ரவரி முதலாம் திகதி காலை 8 மணிக்கு நாகப் பட்டினத்திலிருந்து பயணத்தை ஆரம்பித்து, நான்கு மணி நேரத்தில் காங்கேசன்துறையை வந்தடையும்.

150 பயணிகள் இந்தப் படகில் பயணிக்க முடியும் என்பதுடன், ஒரு பயணி 60 கிலோவினை கொண்டு செல்ல முடியும். விரைவில் பயணச்சீட்டுக்கான முன்பதிவு ஆரம்பமாகவுள்ளது.

வாரம் 6 நாட்கள் சேவையில் ஈடுபடவுள்ளதுடன் பராமரிப்பு பணிகளுக்காக ஞாயிற்றுக்கிழமை நிறுத்தப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஒரு வழிப் பயணத்துக்கு 80 அமெரிக்க டொலர், அதாவது 6 ஆயிரத்து 600 இந்திய ரூபாய் அல்லது 26 ஆயிரம் இலங்கை ரூபாய் கட்டணமாக அறவிடப்படும்.

அரச வரிகளையும் இதர கட்டணங்களையும் குறைப்பதன் மூலம் இந்தப் பயணச்சீட்டின் விலையை மேலும் குறைப்பது குறித்து இந்திய, இலங்கை அரசுகளிடம் பேசிக் கொண்டிருக்கிறோம்.

ஒரு வழிப் பயணத்திற்கான கட்டணத்தை 57.50 அமெரிக்க டொலர் அதாவது இலங்கை மதிப்பில் சுமார் 18,500 ரூபாய் அளவுக்குக் குறைவுள்ளதாகவும் நிரஞ்சன் நந்தகோபன் தெரிவித்துள்ளார். (ம-7)

## ரூ.86 கோடியே...

விசேட போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கை பருத்தித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளிலும் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் நேற்று திங்கட்கிழமை காலை குறித்த போதைப்பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

வல்லிபுர ஆழ்வார் ஆலய தீர்த்தக் கடற்கரை பகுதியில் படகில் வந்த மர்ம நபர்களால் பொதி ஒன்று வீசப்பட்டுள்ளதாக பருத்தித்துறை பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து குறித்த போதைப் பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

பருத்தித்துறை தலைமைப்பீட பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பியந்த அமரசிங்க தலைமையில் பருத்தித்துறை பொலிஸார் நேற்று திங்கட் கிழமை காலை குறித்த இடத்திற்கு சென்று மறைவாக இருந்து அவதானித்துள்ளனர். நீண்டநேரமாகியும் குறித்த பொதியை எடுத்துச் செல்வதற்கு எவரும் வராத நிலையில் பொலிஸார் குறித்த பொதியை கைப்பற்றி சோதனை செய்துள்ளனர்.

மத்திய போதைப்பொருள் ஒழிப்பு பணியகத்தின் தரவுகளுக்கு அமைவாக கைப்பற்றப்பட்ட அபின் போதைப் பொருள் ஒரு கிலோ ரூ. ஒரு கோடியே 80 லட்சம் என்ற அடிப்படையில் கைப் பற்றப்பட்ட 48 கிலோ அபினின் மொத்த பெறுமதி ரூபாய் 86 கோடியே 40 லட்சம் எனவும், ரூ.44 லட்சத்து 80 ஆயிரம் பெறுமதியான 28 கிலோ கிராம் கேரள கஞ்சாவும் கைப்பற்றப்பட்டிருப்பதாக பருத்தித்துறை தலைமைப்பீட பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பியந்த அமரசிங்க தெரிவித்தார்.

இவ்வாறுகைப்பற்றப்பட்ட அபின் போதைப் பொருள் இலங்கையில் பாவனையில் இல்லாத நிலையில் கடல் வழியாக இலங்கைக்குள் கொண்டுவந்து வேறு நாடுகளுக்கு கொண்டு செல்லும் நோக்கில் கடத்தி வரப்பட்டிருக்கலாம் என சந்தேகிப்பதாகவும் இவ்வளவு பெருந் தொகை அபின் கைப்பற்றப்பட்டுள்ளமை இலங்கை வரலாற்றில் முதன்முறை என்றும் அவர் மேலும் தெரிவித்திருந்தார்.

கைப்பற்றப்பட்ட அபின் மற்றும் கஞ்சா போதைப்பொருட்களை பருத்தித்துறை நீதிமன்றத்தில் பாரப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பருத்தித்துறை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ம-7,33,60)

## ஜப்...

ஜப்பான் நிதியமைச்சர் சுசுகி ஷூனிச்சி ஜனவரி 11 முதல் 12 வரை இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார்.

இந்த விஜயத்தின் போது ஜப்பானிய நிதியமைச்சர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி ஆகியோருடன் உத்தியோகபூர்வ கலந்துரையாடல்களை நடத்த உள்ளார். (ம-7)

## வாகன இறக்கு...

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில், வாகன இறக்குமதி குறித்து ஆராய நியமிக்கப்பட்ட குழுவின் பரிந்துரைகளுக்கு அமையவே வாகனங்களை இறக்குமதி செய்வது குறித்து தீர்மானிக்கப்படும் என அவர் குறிப்பிட்டார். (ம-7)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

லக்கி 7 VIP
திகதி 2024.01.08
சீட்டிழுப்பு இலக்கம் 0179
Q 9 8 3 6 8 2 Q
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2024.01.08
சீட்டிழுப்பு இலக்கம் - 1383
N 27 35 55 57 N
ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் | விசேட ஆங்கில எழுத்து
Double Chance இலக்கம் 03040
தேசிய லொத்தர் சபை
தொலைபேசி : 011 460 7000 / 011 232 4324

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3595
சீட்டிழுப்பு திகதி | 08.01.2024
ஆங்கில எழுத்து S
வெற்றி இலக்கங்கள் 17 23 48 58
விசேட வெற்றி எழுத்து S
04681
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.01.08
சீட்டிழுப்பு இலக்கம் 0662
வெற்றி இலக்கினம் தனுசு
வெற்றி இலக்கங்கள் 29 31 50 53
விசேட இலக்கினம் தனுசு
தன யோக இலக்கம் 33656
தேசிய லொத்தர் சபை
நாளுக்கான விதி எண் 24

மஹஜன சம்பத
திகதி 2024/01/08
சீட்டிழுப்பு இலக்கம் 5353
ஆங்கில எழுத்து D
வெல்லப்பட்ட இலக்கங்கள் 8 9 8 2 1 0
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 08/01/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1701
வெற்றி எழுத்து X
சுப்பர் இலக்க 06
வெற்றி இலக்கங்கள் 04 26 36 80
Double Chance 74036
தொலைபேசி: 0112-470662, 0114-607000
இணையம்: www.nlb.lk

உத்தியோகபூர்வ முடிவுகள்
சுபிரி தன சம்பத
08.01.2024
வெற்றி வாரம் 061
வர்ணம் ஊதா
ஆங்கில எழுத்து/ பாளை ஆங்கில எழுத்து H
மற்றும் வெற்றி இலக்கம் 8 2 9 4 4 1
செகண்ட் சான்ஸ் விசேட இல. ரூ.100,000/- பணப் பரிசுகளுக்கு 94155
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 25,907,491.20
DLB
தொலை பேசி : 011-2 333 546-47
Web : www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2327
வர்ணம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 2024.01.08
தினம் திங்கட்கிழமை
வெற்றி இலக்கங்கள் 12 35 48 59
ஆங்கில எழுத்து V
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 65,857,509.60
செகண்ட் சான்ஸ் விசேட இல. 76575
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா Shanida
திகதி 2024.01.08
வெற்றி வாரம் 4488
வர்ணம் இளம் நீலம்
வெற்றி இலக்கங்கள் 07 30 53 54
ஆங்கில எழுத்து T
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.69,390,076.40
செகண்ட் சான்ஸ் விசேட இல. ரூ.100,000/- பணப்பரிசு 4 3 1 4 2
அபிவிருத்தி லொத்தர் சபை
தொலைபேசி: 0112 333 546-47
www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி அதிர்ஷ்டம்
சீட்டிழுப்பு வாரம் 4039
வர்ணம் மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 2024.01.08
தினம் திங்கட்கிழமை
வெற்றி இலக்கங்கள் 11 43 55 62
துலாம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 4,402,856.40
விசேட இலக்கத்திற்கு ரூ.50,000/- பணப்பரிசு 573090
அபிவிருத்தி லொத்தர் சபை
தொலைபேசி: 0112 333 546/47
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
I 11 14 41 44 49
சுப்பர் இலக்கம்
சீட்டிழுப்பு வாரம் 1503
வர்ணம் பச்சை
திகதி 08.01.2024 திங்கள்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 489,732,406.20
DLB DEVELOPMENT LOTTERIES
தொலை பேசி : 011-2 333 546-47
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ஜயோதா Jayoda
திகதி 2024.01.08
வெற்றி வாரம் 1989
வர்ணம் செம்மஞ்சள்
வெற்றி இலக்கங்கள் 22 30 32 45
ஆங்கில எழுத்து Y
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.21,348,587.60
விசேட இலக்கத்திற்கு ரூ.50,000/- பணப்பரிசு 4 8 9 1 3
அபிவிருத்தி லொத்தர் சபை
தொலைபேசி: 0112 333 546-47
www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அத கோடிபதி ADA KOTIPATHI
திங்கட்கிழமை
வெற்றி வாரம் : 2153
வர்ணம் : சிவப்பு
சீட்டிழுப்பு திகதி : 2024.01.08
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 82,048,692.80
வெற்றி இலக்கங்கள் 10 55 67 73
ஆங்கில எழுத்து U
ரூ.100,000/- பணப் பரிசுகளுக்கான விசேட இலக்கங்கள் 516726
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## அமிர்தநாயகி இம்மனுவேல் (ராசாத்தி)

(ஓய்வுபெற்ற அதிபர், இளவாலை றோ.க ஆண்கள் பாடசாலை)

சண்டிலிப்பாயை பிறப்பிடமாகவும் இளவாலையை வசிப்பிடமாகவும் கொண்ட அமிர்தநாயகி இம்மனுவேல்(ராசாத்தி) அவர்கள் கடந்த 07.01.2024 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேதநாயகம் - மரியம்மா தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை - மரியம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும் அந்தோனிப்பிள்ளை இம்மனுவேலின் அன்பு மனைவியும் வேதநாயகம் ஜெயசோதிநாதன் (திருகோணமலை), குணரட்ணம் திரேசா, புஸ்பராணி, வேதநாயகம் மரியதாசன் (கிளிநொச்சி), காலஞ்சென்ற வேதநாயகம் பத்திமாநாயகம் மற்றும் வேதநாயகம் அமிர்தஜோதி(பத்தாவத்தை இளவாலை), வேதநாயகம் ஜெயரட்ணம்(ஜெயா - வவுனியா), காலஞ்சென்ற வேதநாயகம் இராஜசீலன் (திருகோணமலை) மற்றும் வேதநாயகம் ஜெயசீலன்(டென்மார்க்), கிறிஸ்ரிமோகன் பத்மசீலி(வவுனியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் றொசானி(அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம் சண்டிலிப்பாய்), நிறோஷ்(DNB Rate உரிமையாளர்) ஆகியோரின் அன்புத் தாயாரும் வசந்தகுமார்(சிரேஷ்ட செயற்றிட்ட இணைப்பாளர் serendip Be the change foundation), ஜென்சி(நெல்லியடி முன்பள்ளி) ஆகியோரின் மாமியாரும் கனொக்ஸ் மரினோ, அனா ஒபீரின், அனன்சியா மெர்லீன், சயோனா, அர்விஷ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் திருவுடல் 09.01.2024 செவ்வாய்க்கிழமை அன்று காலை 10.30 மணியளவில் இளவாலை புனித அன்னாள் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பின்னர் நல்லடக்கத்திற்காக இளவாலை சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

077 186 4824
077 238 8083
(C-8106)

தகவல் :
குடும்பத்தினர்

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (18515)

076 825 7716 (ஆகாஸ்)

யாழ். கச்சேரிக்கு அருகில் காணி உடன் விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அருகில் 3 1/2 பரப்புக் காணி, இரண்டு வெட்டுக் கிணறுகளுடன் உடன் விற்பனைக்கு உண்டு. இந்தக் காணி சுண்டுக்குழி தபால் நிலையத்துக்கு அருகில் - கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்துள்ளது.
55 மில்லியனுக்கு (5 கோடியே 50 லட்சம்)
மேலான விலை எதிர்பார்க்கப்படுகிறது.
(கிழமை நாட்களில் பார்வையிடலாம்)
தொடர்புகளுக்கு :
+447963743585(Whatsapp)
021 222 7141(Srilanka)
E.mail : Jamesraj_uk@yahoo.co.uk
(18434)

காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கல்வியங்காடு டச்சு றோட் முகப்புடன் 6 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

G.P.S விளையாட்டு அரங்கு வீதி முகப்புடனும் 20 அடிப்பாதையுடன் இரண்டு இரண்டு பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில்

தரகர் தேவையில்லை.

பார்வையிடும் நேரம் : 6.00am - 6.00pm வரை

077 454 6538
075 638 5684
(18564)

# மரண அறிவித்தல்



## மகாலிங்கம் சந்திரா

நல்லூர் அரசடியைப் பிறப்பிடமாகவும் முடமாவடியை வசிப்பிடமாகவும் கொண்ட மகாலிங்கம் சந்திரா அவர்கள் நேற்று (08.01.2024) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை - கனகம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான பண்டாரி - சின்னத்தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் மகாலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும் வாசுஜா, வினோஜன், வஸ்திகா ஆகியோரின் அன்புத் தாயாரும் துஸ்யந்தன் (டயஸ்), மதுஷன் ஆகியோரின் அன்பு மாமியாரும் இந்திரா அவர்களின் அன்புச் சகோதரியும் தேவராசா அவர்களின் அன்பு மைத்துனியும் காலஞ்சென்றவர்களான பவளம், தர்மலிங்கம், சின்னத்துரை மற்றும் சந்திரலிங்கம், சதிஸ்வரி, சசிரேகா, சாந்தினி, பொன்மணி, சந்திரமோகன் சுரேஸ்குமார் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று ( 09.01.2024 ) செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று நண்பகல் 12.00 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

077 356 5285
077 [illegible]
(18553)

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.01.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.